# புதிய ஜனநாயகம்

மார்ச் 2013
ரூ.10.00




## 'குடியரசு' அல்ல; கொலை அரசு!

# "பெருகிவரும் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம்!"

## – தமிழகம் மற்றும் புதுச்சேரியில் புரட்சிகர அமைப்புகளின் தொடர்பிரச்சாரம்




பெருகிவரும் பெண்கள் மீதான பாலியல் வன் கொடுமைத் தாக்குதல்களை எதிர்த்தும், தனியார்மய-தாராளமயக் கொள்கைகள் இதனைத் தீவிரப்படுவதை உணர்த்தியும், இம்மறுகாலனி யாதிக்கக் கொள்கைளைக் கட்டிக்காக்கும் இன்றைய அரசியலமைப்பு முறையை வீழ்த்தி புதிய ஜனநாயக அரசியலமைப்பு முறையை நிறுவுவதற்கான திசையில் போராட்டங்களை முன் னெடுத்துச் செல்ல அறை கூவியும் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ம.க.இ.க, வி.வி.மு, பு.மா.இ.மு, பு.ஜ.தொ.மு, பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதி களில் துண்டுப் பிரசுரம், சுவரெழுத்து, சுவரொட்டிகள், தட்டிகள், ஆட்டோ பிரச்சாரம், ஆலை வாயிற் கூட்டங்கள், கல்லூரிகள், விடுதிகள், அலுவலகங்கள், பேருந்து - ரயில் நிலையங்கள், குடியிருப்புப் பகுதிகள் - என வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வரு கின்றன.

ஒசூரில் பு.ஜ.தொ.மு.வும் வி.வி.மு.வும் இணைந்து 17.2.2013 அன்று மாலையில், ''பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம்! ஆணாதிக்கத் திமிரை ஒழிப்போம்! மனித மதிப்பீடுகளை மழுங்கடிக்கும் மறுகாலனியாதிக்க கலாச் சாரத்தைத் துடைத்தெறிவோம்!'' என்ற முழக்கங் களுடன் ராயக்கோட்டை சாலையிலிருந்து ராம்நகர் அண்ணாசிலை வரை விண்ணதிரும் முழக்கங்களுடன் பேரணியை நடத்தியது. அதன் பின்னர் பு.ஜ.தொ.மு.மாவட்டத் தலைவர் தோழர் பரசுராமன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், சிவகங்கை மாவட்ட பு.ஜ.தொ.மு. அமைப்பாளர் தோழர் நாகராஜ் சிறப்புரையாற்றினார்.

**சென்னையில்,** ''பெண்கள் மீதான பாலியல் வன் கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம்!'' என்ற முழக் கத்துடன் திருவள்ளூர் மாவட்ட பு.ஜ.தொ.மு. 18.2.2013 அன்று செங் குன்றம் பேருந்து நிலையம் அருகில் பொதுக்கூட்டத்தை நடத்தியது. பு.ஜ.தொ.மு. மாநில இணைச் செயலர் தோழர் சுதேஷ் குமார் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், ம.உ.பா. மையத்தின் மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் லயனல் அந்தோணி ராஜ் சிறப்புரையாற்றினார். பெருகிவரும் பெண்கள் மீதான பாலியல் கொடுமை களையும், ஆணாதிக்க குடும்ப - சமூக அமைப்பு முறையும் அதற்கேற்ற சட்டம், நீதி, அமலாக்கத் துறைகளும் நீடிக்கும் நிலையில் சட்டச் சீர்திருத்தங்களாலோ, கடுமையான தண்டனைகளாலோ இக் கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு




தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 28 இதழ்: 5**

**மார்ச் 2013**

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: *முகிலன்*



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561


## ஈழம்

# தேவை: முற்றிலும் புதியதொரு கொள்கை - நடைமுறை

ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் (2009-ஆம் ஆண்டு மே மாதம்) இலங்கையின் இனவெறி பாசிச, பயங்கரவாத அரசும் இராணுவமும் நடத்திய ஈழத் தமிழின அழிப்புப் படுகொலைகள் மிகக் கொடூரமாகவும் வக்கிரமாகவும், மனிதத் தன்மைகள் சிறிதுமற்றதாக நடத்தப்பட்ட போர்க் குற்றங்கள்தாம் என்பதை நிரூபிக்கும் ஏராளமான ஆதாரங்கள் ஏற்கெனவே தொடர்ந்து வெளிவந்துள்ளன.

இந்த போர்க் குற்றங்களை நடத்திய இலங்கை அரச பயங்கரவாதிகள் மீது சர்வதேச நீதிமன்ற விசாரணை, கடும் தண்டனை என்பதற்கு பதிலாக ''மனித உரிமை மீறல்கள்'' என்ற நீர்த்துபோன பெயர் சூட்டி குற்றவாளிகளே விசாரித்து, நிவாரணம் தேடிக் கொள்ளச் செய்யும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமை அமைப்பு நிறைவேற்றி ஓராண்டாகப் போகிறது. அதன் மீதான பரிசீலனை இம்மாதம் அவ்வமைப்பில் வரவிருக்கும் சூழலில் சேனல்-4 என்ற ஆங்கிலத் தொலைக்காட்சி ''நிகழாத அமைதி மண்டலம் - இலங்கையின் படுகொலைக் களம்'' என்ற ஆவணப் படத்தை அவ்வமைப்பின் ஜெனிவா மாநாட்டில் முன்வைக்கப் போகிறது.

அந்த ஆவணப் படத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு படங்கள் இப்போது வெளியாகியுள்ளன. அவை, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது இளைய மகன் பாலச்சந்திரன், தனது ஐந்து மெய்க் காப்பாளர்களோடு இலங்கையின் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு, பல மணி நேரம் இராணுவ முகாமில் காவலில் வைத்திருந்து, கொடூரமாகவும் வக்கிரமாகவும் கொல்லப்பட்டான் என்பதை சேனல்-4 தொலைக்காட்சி நிரூபிக்கும் காட்சிப் படங்கள். ''பிரபாகரனின் மகன் ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையின் ஊடே சிக்கிக் குண்டு பாய்ந்து இறந்து போனான்'' என்று இலங்கை அரசு சொல்லிவருவது அப்பட்டமான பொய்தான் என்பதை அப்படங்கள் நிரூபிப்பதாக உள்ளன. இலங்கை இராணுவத்தின் வன்கொடுமைப் பிரிவான 53-வது பட்டாளத்திடம் பாலச் சந்திரனும் அவனது ஐந்து மெய்க்காப்பாளர்களும் சரணடைந்தனர். அதிபர் ராஜபக்சேவின் தம்பியும் இராணுவச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்சே உத்திரவிட்டதன் பேரில் சரணடைந்தவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

அப்படங்கள், சிங்கள இனவெறிப் பாசிச -அரச பயங்கரவாதப் போர்க் குற்றவாளிகள் மற்றும் இந்திய ஆட்சியாளர்கள் போன்ற அவர்களின் சர்வதேசப் பங்காளிகள் தவிர உலக மக்கள் அனைவரின் நெஞ்சங்களையும் பதைபதைக்கச் செய்துவிட்டன. ஆனால், இனஅழிப்புக் குற்றவாளிகள் மற்றும் அவர்களின் பங்காளிகளுக்கு இவை ஒன்றும் புதிதானவை அல்ல. இனஅழிப்புப் போரில் தாம் புரிந்த குற்றங்களை எல்லாம் வெளியில் அடியோடு மறுத்து வந்தாலும், அந்தக் குற்றங்களைத் தமது வீரதீரச் சாதனைகளாக - வெற்றிப் பதக்கங்களாகப் பதிவு செய்து வைத்துக் கொண்டுள்ளார்கள்.

ஆகவே, ராஜபக்சேக்கள் தலைமையிலான சிங்கள இனவெறி பாசிச, பயங்கரவாதிகளின் போர்க்குற்றச் சாதனை ஆவணங்களின் பட்டியலில் உள்ளவைதாம் தவணை முறையில் அவ்வப்போது வெளிவருகின்றன. அப் போர்க் குற்றங்களின் உண்மை விவரங்கள் முழுமையும் இப்போது அவர்களுக்கு மட்டுமே தெரிந்தவை அல்ல. ராஜபக்சேக்களே கூறியதைப் போல,



பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் இலங்கை இராணுவத்தால் பிடிக்கப்பட்டு, இராணுவக் காவலில் வைக்கப்பட்டு, அதன் பிறகே சுட்டுக்கொல்லப்பட்டான் என்பதை நிரூபிக்கும் சேனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள படங்கள்.

இந்தியாவுக்காக அவர்கள் நடத்திய ஈழப் போரின் குற்றங்கள் இந்தியாவின் ''ரா'' உளவுப் படை மற்றும் இராணுவ அதிகாரிகளின் மேற்பார்வையில் நடந்தவைதாம். இன்றைய இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணவ முகர்ஜி தலைமையிலான சிவசங்கரமேனன், எம்.கே. நாராயணன் போன்ற அதிகாரிகள் வழிகாட்டி நடந்தவைதாம். அமெரிக்க உளவுப்படை சி.ஐ.ஏ. மற்றும் ஐ.நா. பேரவை அதிகாரிகள் கண்முன்பாக நடந்தவைதாம்.

அமெரிக்க ஏகாதிபத்திய வல்லரசானது, உலகமெங்கும் எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் ஒரே வகையான செயல்தந்திரங்களை மேற்கொள்வதில்லை. இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானிய நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசி பேரழிவு நடத்தியது, தற்போது ஆஃப்கான், ஈராக் மீது பகிரங்கமான ஆக்கிரமிப்புப் பேரழிவுப் போரை நடத்தியது; - இவை ஒரு வகை. உலகின் பல ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளில் சி.ஐ.ஏ. உளவுப் படைகளை - கூலிப் படைகளை ஏவி ஆட்சியாளர்களைப் படுகொலை செய்து ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்தியது; தெற்கு வியத்நாம், காங்கோ, சிலியில் அரங்கேற்றிய -இவை மற்றொரு வகை. மேலும் ஒரு வகைதான், விடுதலை இயக்கங்களுக்குள் ஊடுருவி, சதிவேலைகள் புரிந்து, தனது முகமையாளர்கள் மூலம் இயக்கங்களைச் சீர்குலைத்து அவற்றின் இலட்சியங்களைச் சீரழிப்பது; இதற்கு மிக அண்மைக்கால எடுத்துக் காட்டு அரபு நாடுகளில் வெடித்த அரபு மக்கள் எழுச்சிகளுக்குள் புகுந்து, உள்ளிருந்து அவற்றை வீழ்த்தியது. நார்வே நாட்டு எரிக் சோல்ஹைம், ஐக்கிய நாடுகள் அவையின் விஜய் நம்பியார் போன்ற தனது கைக்கூலிகள் மூலம் போர் நிறுத்தம், சமாதான முன்னெடுப்பு என்ற பெயரில் இலங்கை - ஈழப் போரில் நுழைந்த அமெரிக்க ஏகாதிபத்தியம், அதன் இறுதிக் கட்டத்தில் இலங்கை இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைமையிடம் போர் நிறுத்தம், மீட்புக் கப்பல் வருகை, சரணடைவு ஏற்பாடு ஆகிய சதித் திட்டங்களை முன்வைத்து நம்ப வைத்துக் கழுத்தறுத்து விட்டது. இந்த வகையில் ஈழத்தில் நடந்தேறிய போர்க் குற்றங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியம் அறிந்தே நடந்தேறின.

அமெரிக்க மேல்நிலை வல்லரசின் ஒற்றைத் துருவ மேலாதிக்கத்தின் கீழ் உள்ள இன்றைய உலகின் வெனிசுலா, கியூபா, வடகொரியா, ஈரான் போன்ற பகை முரண்பாடு கொண்ட நாடுகளைத் தவிர, அமெரிக்க சி.ஐ.ஏ. உட்பட உளவுப் படைகள் எளிதில் நுழைந்து இராணுவ, அரசியல் இரகசியங்களை அறிய முடியாத நாடுகள் எதுவும் கிடையாது.

இலங்கை அரசின் வேண்டுகோளை அமெரிக்கா ஏற்று, விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்து தனது நாட்டில் வேட்டையாடியது. ஆகவே, சர்வதேச கிரிமினல்களான ராஜபக்சேக்கள் ஈழத்தில் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் எதுவும் அமெரிக்கா அறியாதவை அல்ல. அமெரிக்கா விரும்பினால் போஸ்னியா, ஆஃப்கான், ஈராக்கில் செய்ததைப் போல இப்போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டி இலங்கையின் மீது நேரடித் தண்டனை நடவடிக்கையாக அதிரடி இராணுவத் தாக்குதல்கள் நடத்த முடியும். ஆனால், அமெரிக்கா அவ்வாறு செய்யாமல் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களை ராஜபக்சேக்களே விசாரிக்கலாம், தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று மென்மையாக அணுகுகிறது. ஏனென்றால் இலங்கை அதன் பகை சக்தி அல்ல; நட்பு நாடுதான்.

அமெரிக்காவும் அதன் எடுபிடி நாடுகளும் சொல்லிக் கொள்வதைப் போல ''உலகில் எங்குமே பயங்கரவாதக் குற்றச் செயல்களும் அரச பயங்கரவாதப் போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் நடக்கவே கூடாது. எங்கும் ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டும்'' என்பது அவற்றின் உண்மையான நோக்கமல்ல. அமெரிக்காவே உலகின் பல நாடுகளிலும் உள்ள பாசிச பயங்கரவாத, முடியரசு சர்வாதிகார இராணுவக் கொடுங்கோன்மை அரசுகளை மட்டுமல்ல, பல பயங்கரவாத கிரிமினல் குற்றக் கும்பல்களையும் ஊட்டி வளர்க்கிறது. தானே உலகின் பல இடங்களில் ஆள்கடத்தல்கள், வதை முகாம்கள், படுகொலைகள், ஆளில்லா விமானங்களை ஏவி கொத்துக் குண்டுகளை, நச்சுக் குண்டுகளை வீசி சிவிலியன் மக்களைப் படுகொலைகள் புரிவது ஆகிய இராணுவ - அரச பயங்கரவாதக் குற்றச் செயல்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.



சிங்களப் பேரினவாத இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அம்பலப்பட்டு வரும் வேளையிலும், பீகார் மாநிலத்திற்கு வந்த ராஜபக்சே கும்பலுக்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவ்வாறான ஒரு நாடு இலங்கையின் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்களை விசாரித்து நடவடிக்கை எடுத்திடக் கோரும் ஒரு தீர்மானத்தை சர்வதேச மனித உரிமை அரங்கில் முன்மொழிந்து, அதன் எடுபிடி நாடுகள் ஆதரிக்கின்றன என்றால், இவை அனைத்தும் சர்வதேச பூகோள - அரசியல் மற்றும் இராணுவ உள் நோக்கங்களுக்காக நடத்தப்படும் வெறும் அரசு தந்திர மாறாட்டங்கள் தவிர வேறொன்றும் அல்ல. உலகின் கிழக்கு நாடுகளையும் மேற்கு நாடுகளையும் இணைக்கும் பெருங்கடல் வழித்தடத்தில், சர்வதேச இராணுவ, பொருளாதார, போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்த வழித்தடத்தில் உள்ள இலங்கையை அமெரிக்கா தனது முழுமையான மேலாதிக்கத்தின் கீழ் இருத்திக் கொள்வதற்கான நோக்கங்களை உள்ளடக்கியதுதான். மற்றபடி போர்க் குற்றங்களுக்காகவும் மனித உரிமை மீறல்களுக்காகவும் நடுநிலை விசாரணை நடத்தி இலங்கை அரசு மீதும் ராஜபக்சேக்கள் மீதும் தண்டனை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது அமெரிக்காவின் நோக்கமே கிடையாது.

எனவேதான், இலங்கை அரசு மீதான குற்றச்சாட்டுகளை இலங்கை அரசே விசாரித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்கிற வரம்புகளைத் தாண்டாத ஒரு தீர்மானத்தை அமெரிக்கா முன்வைத்து, ஐ.நா. அவையின் மனித உரிமைகள் அமைப்பின் கடந்த ஆண்டு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. அது போதாதென்று, ''இலங்கை அரசின் இறையாண்மையைப் பாதிக்கக் கூடாது'' என்று இலங்கை அரசுக்குத் துணை போகும் வகையிலான இந்தியா கொண்டு வந்த திருத்தமும் மறுக்காமல் ஏற்கப்பட்டது. கடந்த ஆண்டுத் தீர்மானத்தை ஒரு அணுஅளவு கூட நிறைவேற்றவில்லை. ஆனாலும், இலங்கை அரசுக்கு எதிரானதென்று கூறப்படும் இந்த ஆண்டுத் தீர்மானமோ, இந்தியத் திருத்தத்தோடு மேலும் நீர்த்துப் போவதற்காகவே அமெரிக்காவால் முன்வைக்கப்படுகிறது.

இவ்வாறான அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்; ஈழ மக்களிடையே ஒரு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் - என்பவை தாம் கருணாநிதி, வீரமணி, திருமா தலைமையிலான ''டெசோ'' அமைப்பின் கோரிக்கை. இக்கோரிக்கைகளோடு, இலங்கை ராஜபக்சே கும்பலின் போர்க் குற்றங்கள் மீது நடுநிலையான சர்வதேச விசாரணை, சர்வதேச நீதி மன்றத்தால் தண்டிக்கப் படவேண்டும் என்று மற்ற பிற தமிழினவாத அமைப்புகள் கோருகின்றன.

ஈழத் தமிழினப் பிரச்சினையில் எவ்வளவோ பின்னடைவுகள் - இழப்புகளுக்குப் பிறகும் சரியான பாடங்கள் கற்றுக் கொள்ளப்படவில்லை. மீண்டும் துரோகங்கள், அதே தவறுகள் அரங்கேற்றப்படுகின்றன. முதலாவதாக நட்பு சக்திகளையும், எதிரி சக்திகளையும் வரையறுத்துக் கொள்வதில், அதற்கேற்ப இயக்கங்களை வழிநடத்துவதில் மீண்டும் தவறிழைக்கப்படுகிறது.

இந்திய அரசும் ஆளும் வர்க்கங்களும் என்ன நேர்ந்தாலும் இலங்கையின் சிங்கள இனவெறி அரசுக்கு எதிராகவும், ஈழத் தமிழினத்துக்கு ஆதரவாகவும் நிலையெடுக்கவே மாட்டா. அதில்தான் இந்தியாவின் அரசியல், பொருளாதார, அரசுதந்திர, பிராந்திய விரிவாக்க ஆதிக்க நலன்கள் தங்கியிருக்கின்றன. இலங்கையில் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆதிக்கம் பெறுவதைக் காட்டி இந்தியா ஈழத்தை ஆதரிக்க வேண்டுமென்றோ, ஈழம் இந்திய நலன்களுக்கு எதிராகப் போகாது; எப்போதும் துணை நிற்கும் என்று வாக்குறுதியளித்தோ இன்னும் பலவாறான ''தாஜா''க்கள் செய்தோ இந்தியாவின் ஆதரவைப் பெறமுடியாது. பிரபாகரன் காலத்திலேயே அதற்காக மேற்கொண்ட முயற்சி

**''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர்**
**மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி 8-இன் படி)**

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 2. | வெளியிடும் காலம் | : மாதம் ஒருமுறை |
| 3. | அச்சிடுபவர் பெயர் | : இரா. சண்முகராசு |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 4. | உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் | : இரா. சண்முகராசு, |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 5. | ஆசிரியர் பெயர் | : இரா. சண்முகராசு |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.

1.3.2013

கள் தோற்றுப்போய்விட்டன. அமெரிக்காவும் இந்தியாவைப் போன்ற தன்மை உடைய நாடுதான்; அதைவிட மேலாக உலக மேலாதிக்கத்துக்காக வெறிபிடித்து அலையும் நாடுதான்.

இலங்கையின் சிங்கள இனவெறி அரசின் போர்க் குற்றங்களை விசாரித்துத் தண்டிப்பதில் இந்தியாவும் அமெரிக்காவும் துணைநிற்குமென்பது, பொய்த் தோற்றத்தை உருவாக்கி உலகத் தமிழர்களை ஏமாற்றுவது தான். ஈழ ஆதரவு நாடகமாடும் கருணாநிதி மற்றும் ஜெயலலிதா தலைமையிலான இரண்டு திராவிடக் கட்சிகளும் நன்கு தெரிந்தே இத்தகைய ஏமாற்று வேலையைச் செய்கின்றன. ஏனெனில், இந்திய அரசின் சதிகளை அறிந்திருந்தும் இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்கு வெறும் பார்வையாளர்களாகவே இருந்து அதற்குத் துரோகத்தனமாகத் துணைபோனவைதாம், இக்கட்சிகள். ஓட்டுக் கட்சி அரசியல் ஆதாயத்துக்காக அவ்வப்போது ஈழ ஆதரவு சவடால்கள் அடித்தாலும், இவை தமது பிழைப்புவாத அரசியல் நலன்களுக்கு மாறாக ஒருபோதும் ஈழ ஆதரவு நிலையெடுக்கமாட்டா.

இன்றைய நிலையில் ஈழப் பிரச்சினையில் அக்கறையுள்ள தமிழர் அமைப்புகள் என்ன நிலை எடுத்துள்ளன? அவை என்ன செய்கின்றன? அவை சரியானவைதானா? விடுதலைப் புலிகள் மீதும் அதன் தலைவர் பிரபாகரன் மீதும் விமர்சனமற்ற விசுவாசம் காட்டும், பிரபாகரனை விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட, தவறே செய்யாத, தன்னிகரற்ற பிம்பமாக வழிபடும் தமிழினவாதக் குழுக்கள் மேற்கண்ட கேள்விகளை எழுப்புகிறவர்கள் மீது பாய்ந்து குதறுவதற்குத் தயாராக உள்ளன. விடுதலைப் புலிகள் மீதும் அதன் தலைவர் பிரபாகரன் மீதும் விமர்சனம் வைத்தவர்கள், பிரபாகரன் தலைமையை ஏற்காதவர்கள் எல்லோரும் ஈழத் தமிழினத்துக்கே எதிரானவர்கள்; எதிரியின் கைக்கூலிகள்; அப்படிப்பட்ட ஈழத் தலைவர்களைக் கொன்றதுகூடத் தவறல்ல; அப்படிப்பட்ட தமிழ்நாட்டுத் தமிழர்கள் சொல்வதையும் செய்வதையும் ஏற்கக்கூடாது என்பதுதான் அத்தமிழினவாதக் குழுக்களின் நிலைப்பாடு.

இந்திரா, எம்.ஜி.ஆர், ''ரா'' போன்ற எதிரிகளுக்குத் துணைபோன அதேசமயம், ஈழ விடுதலைக்கான சகோதர இயக்கத்தினரை புலிகள் அழித்தொழித்தனர். தப்பிக்கவே வழியில்லாத ஓரிரு சதுரக் கிலோமீட்டர் அளவுள்ள புவிப் பரப்பில், ஈழத்தின் எதிரிகள் (இந்தியா, அமெரிக்கா)வந்து காப்பார்கள் என நம்பி இலட்சக்கணக்கான தமிழர்களைக் குவித்தனர். இவ்வாறு ஈழ விடுதலைப் போரைத் தலைமையேற்று வழிநடத்துவதில், நண்பர்களையும் எதிரிகளையும், ஈழப் போரின் அரசியல் நிலைமைகளையும் மதிப்பீடு செய்து அணுகுவதில் தொடங்கி ஏராளமான அரசியல், இராணுவப் பிழைகள் செய்த பிரபாகரன் மீதுதான் உலகமகா அரசியல், இராணுவத் தலைவர் என்ற கருத்துருவாக்கமும் தனிநபர் வழிபாடும் உருவாக்கப்பட்டது.

இதில் தமிழகத் தமிழினவாதக் குழுக்களின் பங்கு கொஞ்சமல்ல. இதோ பலாலியில் புலிக் கொடியேற்றிவிட்டார்கள்; நாளையே சுதந்திரத் ஈழம் பிறப்பிக்கப் படும் என்றார்கள்; முள்ளிவாய்க்காலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு கூட புலிகள் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள் என்றார்கள்; மூன்று வாரங்களுக்கு முன்புகூட புலிகள் முல்லைத்தீவில் முடங்குவதற்குக் காரணம் பிரபாகரன் ஏதோ இரகசியத் திட்டங்கள் வைத்திருக்கிறார் என்றார்கள்.

இப்போதும்கூட, பிரபாகரன் அரசியல் - இராணுவத் தவறே செய்யவில்லை; 20 நாடுகள் கூட்டுச் சேர்ந்து இனப்படுகொலையை நடத்தினர் என்று கூறி, ஈழப் போரின் பேரிழப்பு, பின்னடைவுக்கான காரணங்களைத் திரும்பிப் பார்ப்பதற்கு மறுக்கிறார்கள். அவ்வாறு செய்தால் விடுதலைப் புலிகள், பிரபாகரன் மீது தாம் உருவாக்கிய பிம்பங்கள் கலைந்து போகும்; அதில் தமது பங்கிற்குப் பொறுப்பேற்க வேண்டிவரும். அதனால்தான் பிரபாகரன் கொல்லப்பட்ட உண்மையைக்கூட ஒப்புக் கொள்ளும் துணிவற்றவர்களாயுள்ளனர். மேலும் பிரபாகரன் நடந்த அதே பிழையான அரசியல் பாதையில் போகின்றனர்.

இலங்கை அரசின் போர்க் குற்றங்களை விசாரித்துத் தண்டிப்பதில் இந்தியாவும் அமெரிக்காவும் துணை நிற்குமென்ற நம்பிக்கையை,பொய்த் தோற்றத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் இப்போதும் இந்த ''தமிழினத் தலைவர்''களும், ''தமிழினவாதக் குழு''க்களும் ''தமிழினப் போராளி''களும் ஏற்படுத்துகின்றனர். ஈழத்தில் நடந்த போர்க் குற்றங்களில் இந்தியாவும் கூட்டுப் பங்காளிதான் என்று முள்ளிவாய்க்காலுக்குப் பிறகாவது கண்டுபிடித்த சிலர், தமிழக அரசியல் கட்சிகளும் சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுபட்டு அழுத்தம் கொடுத்தால் இந்தியா, அமெரிக்கா மற்றும் உலக நாடுகளது நிர்ப்பந்தத்தின் மூலமாக சர்வதேச விசாரணை நடத்தி ராஜபக்சேக்களை வீழ்த்த முடியும்; ஈழத்தில் பொது வாக்கெடுப்பு நடத்தி, ஈழம் தன்னாட்சியும் பெறவும் முடியும் என்று நம்பச் சொல்லுகிறார்கள்.

ஆனால், இவை எல்லாமும் இனவாத அடிப்படையிலான இலட்சியமும், தீர்வும், ஓட்டுக் கட்சி பாணியிலான அரசியல், நடைமுறை சிந்தனையும்தாம். இன்றைய ஈழம், இலங்கை, மற்றும் அனைத்து நாட்டு அரசியல் நிலைமைகளை அடிப்படையாகக்கொண்டவையல்ல. இன்றைய ஈழ பிரச்சினையின் யதார்த்த நிலையில் உடனடியான, தற்காலிகத் தீர்வு எதுவும் கிடையாது. எல்லாவற்றையும் அரிச்சுவடியிலிருந்து தொடங்கி அமைப்பையும் இயக்கத்தையும் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. இனவாத நோக்கில் உலகின் பிற்போக்கு, பாசிச அரசுகளின் தயவை நம்புவதற்கு மாறாக, சிறியவையானாலும் ராஜபக்சேக்களின் பாசிசத்துக்கு எதிராகப் போராடும் சிங்கள ஜனநாயகவாதிகள் உட்பட உலகின் முற்போக்கு, புரட்சிகர சக்திகளின் வர்க்க ஒற்றுமையைக் கட்டிப் போராடுவதுதான் நீண்ட காலம் பிடித்தாலும், சிரமமானது என்றாலும் அவசியமானது, உறுதியானது, சரியானது. •

# “மாருதி தொழிலாளர் போராட்டம் வெல்லட்டும்! முதலாளித்துவ பயங்கரவாதம் வீழட்டும்!!”

## – நாடெங்கும் தொழிலாளி வர்க்கத்தின் ஆர்ப்பாட்டம்.

**க**டந்த ஆண்டு ஜூலையில் அரியானாவின் மானேசரிலுள்ள மாருதி கார் ஆலையின் தொழிலாளர்கள், அந்நிறுவனத்தின் கார்ப்பரேட் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடிய ‘குற்ற’த்துக்காக 146 தொழிலாளர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த தொழிற்சங்கத்தினரே சிறையிடப்பட்டுள்ளனர். கடந்த 7 மாதங்களாக அவர்களுக்குப் பிணை வழங்கப்படவில்லை. அவர்களில் 66 பேர் மீது பிணையில் வெளிவர முடியாதபடி கடுமையான வழக்குகள் போடப்பட்டுள்ளன. 546 நிரந்தர மற்றும் 1800 ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தொழிலாளர் குடும்பங்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்படுகின்றன. மாருதி ஆலையில் ஓய்வு பெற்ற இராணுவத்தினரைக் கொண்ட தனியார் குண்டர்படையை ஆலை நிர்வாகம் கட்டியமைத்துள்ளது.




ஒட்டுமொத்தத் தொழிற்சங்கத்தினரும் சிறையிடப்பட்டுள்ளதால், தற்காலிக போராட்டக் கமிட்டி மூலம் தொழிலாளர்கள் நீதிக்காகப் போராடி வருகின்றனர். கடந்த ஜனவரி 21 முதலாக நீதி கேட்கும் பேரணியை அரியானா மாநிலத்தின் பல பகுதிகளில் ஒரு வார காலத்துக்கு மாருதி தொழிலாளர்கள் நடத்தினர். இதில் பங்கேற்ற தொழிலாளர்கள் போலீசாரால் அச்சுறுத்தப்பட்டதோடு, மாருதி தொழிலாளர் சங்கத்தின் அலுவலகம் கடந்த ஜனவரி 22, 23 தேதிகளில் போலீசாரால் சூறையாடப்பட்டது. இந்நிலையில் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையைக் கட்டியமைத்து, தீவிரமாகிவரும் முதலாளித்துவ பயங்கரவாதத்தை வீழ்த்த ஓரணியில் திரண்டு போராடுவதே இன்றைய மறுகாலனியாதிக்க சூழலில் அவசர அவசியக் கடமையாகியுள்ளது.

அரசும் மாருதி நிர்வாகமும் கட்டவிழ்த்துவிட்டுள்ள இத்தகைய தொடர் அடக்குமுறைகளை எதிர்த்தும், சிறையிடப்பட்டுள்ள தொழிலாளி வர்க்கப் போராளிகளை விடுதலை செய்யக் கோரியும், வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை உடனடியாக மீண்டும் வேலையில் அமர்த்தக் கோரியும், பயங்கரவாத மாருதி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் மாருதி தொழிலாளர்கள் நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு விடுத்த அறைகூவலின்படி, கடந்த 5.2.2013 அன்று நாடெங்கும் பல்வேறு தொழிற்சங்கங்களும், மாணவர், இளைஞர் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் ஆர்ப்பாட்டங்கள், ஆலைவாயிற் கூட்டங்கள், அறைக்கூட்டங்கள் - எனப் பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை நடத்தின.

இடது, வலது போலி கம்யூனிஸ்டுகளின் துரோகத் தலைமையைப் புறக்கணித்து, புரட்சிப் பாதையை முன்வைக்கும் தொழிற்சங்கங்களால் 19 மாநிலங்களில் நடந்த இந்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழகத்தில் இயங்கிவரும் பு.ஜ.தொ.மு. தாங்கள் செயல்படும் பகுதிகளில் தோழமை அமைப்புகளுடன் இணைந்து மாருதி தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும், கார்ப்பரேட் பயங்கரவாதத்தை எதிர்த்தும் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

சென்னையில் பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் 5.2.2013 அன்று மாலை மெமோரியல் ஹால் அருகே விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த ஆர்ப்பாட்டத்தில், அரியானா மாருதி தொழிற்சங்க முன்னணித் தொழிலாளர்கள் நான்கு பேர் அங்கிருந்து சென்னைக்கு வந்து இப்போராட்டத்தில் பங்கேற்றனர். அவர்களில், தற்காலிகப் போராட்டக் கமிட்டியின் செயற்குழு உறுப்பினரான தோழர் ஓம் பிரகாஷ், மாருதி ஆலைத் தொழிலாளர்கள் மீது அரசும் ஆலை நிர்வாகமும் கூட்டுச் சேர்ந்து நடத்திவரும் சட்டவிரோத அடக்குமுறைகளைப் பற்றியும், இப்பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம் ஓரணியில் திரள வேண்டிய அவசியத்தையும் விளக்கி உரையாற்றினார். பு.ஜ.தொ.மு. இணைச் செயலர் தோழர் சுதேஷ்குமார், தனியார்மய-தாராளமயத்தால் நாடு முழுவதும் உழைக்கும் மக்கள் கொடூரச் சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டுள்ளதை விளக்கி, முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கமும் அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களும் ஓரணியில் திரண்டு போராட அறைகூவினார்.



சென்னை மட்டுமின்றி, திருச்சி-திருவரம்பூர், ஓசூர், புதுச்சேரி, கோவை ஆகிய பகுதிகளிலும் பு.ஜ.தொ.மு. சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அடக்குமுறைக்கும் பழிவாங்கலுக்கும் ஆளாகியுள்ள மாருதி தொழிலாளர்களுக்கு ஆதரவாக பல்வேறு ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் திரளாகப் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டங்கள் வர்க்க ஒற்றுமையைப் பறைசாற்றி, கார்ப்பரேட் பயங்கரவாதத்தை வீழ்த்தப் போராட அறைகூவுவதாக அமைந்தன.

– பு.ஜ. செய்தியாளர்கள்

# ‘குடியரசு’ அல்ல; கொலை அரசு!

**அப்சல் குரு உள்ளிட்டுத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட பலருக்கும், அத்தண்டனை அரசியல் காரணங்களுக்காகவே அளிக்கப்பட்டிருக்கிறது.**

**அ**ஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்ட நினைவு மறையும் முன்பே, அப்சல் குருவையும் தூக்கிலேற்றிவிட்டது, காங்கிரசு கூட்டணி அரசு. அப்சல் குரு பிப்ரவரி 9 அன்று காலையில் இரகசியமாகத் தூக்கிலிடப்பட்டதை, ‘‘ஒரு தீவிரவாதிக்கு அளிக்கப்பட்ட நியாயமான, சட்டப்படியான தண்டனை’’ எனக் கூறி நியாயப்படுத்தி வருகிறது, காங்கிரசு கும்பல். ஆனால், அப்சல் குருவைக் குற்றவாளி என நம்புவோரிலும்கூட ஒரு சாரார், மிகவும் கயமைத்தனமான, வெட்கக்கேடான முறையிலும் சட்ட நடைமுறைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் விதத்திலும் அப்சல் குரு தூக்கிலிடப்பட்டிருப்பதைக் கண்டித்து வருகின்றனர். அப்சல் குருவைத் தூக்கிலிட்டதில் சட்டநடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பது மட்டுமல்ல, இத்தூக்கே காங்கிரசு கூட்டணி அரசு நடத்தியிருக்கும் அரசியல் படுகொலையாகும்; போலீசு நடத்தும் போலி மோதல் கொலைக்கு ஒப்பானதாகும். தீவிரவாத அபாயம் குறித்து அனைத்து ஓட்டுக்கட்சிகளும் ஒரே மாதிரியான கருத்தைக் கொண்டிருப்பதால், பா.ஜ.க., சி.பி.எம். உள்ளிட்ட மற்ற ஓட்டுக்கட்சிகளும் இப்படுகொலைக்கு வக்காலத்து வாங்கி வருகின்றன.


டெல்லி குண்டுவெடிப்பு வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள தேவேந்திர் பால் சிங் புல்லரும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரும் தமது கருணை மனுக்கள் மீது முடிவெடுக்க நீண்ட காலமானதால், தமக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரி உச்சநீதிமன்றத்தில் முறையிட்டுள்ளனர். உச்சநீதிமன்றம் புல்லரின் மனு மீது விசாரணை நடத்தியபோதே தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்கள், கருணை மனு அளித்தவர்களின் விவரங்களைக் கேட்டுப் பெற்றிருப்பதோடு, அவ்வழக்கின் தீர்ப்பையும் ஒத்தி வைத்திருக்கிறது.

பிரணாப் முகர்ஜி இவ்வழக்கின் தீர்ப்பு வரும்வரை பொறுத்திருக்கவில்லை என்பதோடு, தன்னிடம் நிலுவையில் இருந்த 14 கருணை மனுக்களில் அஜ்மல் கசாப் மற்றும் அப்சல் குரு ஆகிய இருவரின் கருணை மனுக்களை மட்டும் தேர்வு செய்து நிராகரித்திருக்கிறார். காங்கிரசு தனது அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளும் நோக்கில் தான் அவரை அரசுத் தலைவராக்கியது. அந்த நம்பிக்கையை முகர்ஜி பொய்ப்பித்துவிடவில்லை என்பதைத் தான் கசாப் மற்றும் அப்சல் குரு விவகாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

‘‘தூக்கு தண்டனைக் கைதியின் கருணை மனு நிராகரிப்பட்டால், அதற்கான காரணங்களை அக்கைதிக்குத் தெரிவிக்க வேண்டும்; கருணை மனு நிராகரிக்கப்பட்டதற்கும், தூக்கிலிடும் தினத்திற்கும் இடையே 14 நாட்கள் கால அவகாசம் இருக்க வேண்டும். இக்கால அவகாசத்தின்பொழுது அக்கைதி தனது மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து வழக்குத் தொடருவதற்கு உரிமை உண்டு. தூக்கிலிடும் தினத்தைக் கைதியின் உறவினர்களுக்கு முன்னரே தெரிவித்து, அவர்கள் கடைசியாகத் தண்டனைக் கைதியைச் சந்திப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும்’’ என்ற சட்ட நடைமுறைகள், உரிமைகள் அனைத்தும் அப்சல் குரு விவகாரத்தில் மீறப்பட்டுள்ளன; மறுக்கப்பட்டுள்ளன. மேலும், அப்சல் குருவின் சடலம் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படாமல், திகார் சிறையிலேயே புதைக்கப்பட்டது. அவரது உடலைத் திருப்பித் தருமாறு கோரிய அப்சல் குருவின் மனைவியின் கோரிக்கை மனிதாபிமானமற்ற முறையில் நிராகரிக்கப்பட்டது.

இந்த அநீதி அப்சல் குரு மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மட்டுமின்றி, காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும், காஷ்மீரத்தைச் சேர்ந்த ஒவ்வொரு முசுலீம் மீதும் இழைக்கப்பட்டிருக்கிறது. அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்து காஷ்மீர் பள்ளத்தாக்கில் எந்தவொரு அரசியல் ஆர்ப்பாட்டமும் நடப்பதை அனுமதிக்கக் கூடாது என்பதற்காகவே, அப்சல் குரு தூக்கிலிடப்பட்ட நாள் தொடங்கி ஏறத்தாழ ஒரு வாரத்திற்கு காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் ஊரடங்கு உத்தரவின் கீழ் கொண்டு வரப்பட்டது; இதையும் மீறி நடந்த

இந்து – இந்திய தேசியவெறிக்குப் பலி கொடுக்கப்பட்ட முகம்மது அப்சல் குரு.



ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட இராணுவ நடவடிக்கையில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்; கைபேசி, இணைய தளம், உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி சேவைகள் மட்டுமின்றி, உள்ளூர் பத்திரிகைகள் வெளிவருவதும் சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்டன.

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் டெல்லி உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தால் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்ட டெல்லிப் பல்கலைக்கழக உருது பேராசிரியரும் காஷ்மீரைச் சேர்ந்தவருமான எஸ்.ஏ.ஆர். கீலானி, அப்சல் குரு தூக்கிலிடப்பட்ட அன்று டெல்லி போலீசாரால் சட்ட விரோதக் காவலில் அடைத்து வைக்கப்பட்டார்.

காஷ்மீரில் இயங்கிவரும் ஹுரியத் மாநாட்டு கட்சியின் தலைவர்களுள் ஒருவரான சையத் அலி ஷா கீலானியின் மருமகனும் (டெல்லியிலிருந்து வெளிவரும்) டி.என்.ஏ., என்ற ஆங்கில நாளிதழின் துணை ஆசிரியருமான இஃப்திகார் ஜிலானி, அவரது மனைவி, பள்ளி செல்லும் வயதுடைய அவரது இரண்டு குழந்தைகள் அனைவரும் டெல்லி போலீசாரால் அவரது வீட்டிலேயே ஐந்து மணி நேரத்திற்கும் மேலாகச் சிறை வைக்கப்பட்டனர்.






காஷ்மீர் தலைநகர் சிறீநகரில் அப்சல் குருவுக்காக நடத்தப்பட்ட பிரார்த்தனைக் கூட்டம் (மேலே); அப்சல் குருவின் உடலை ஒப்படைக்கக் கோரி, உ.பி. அலிகார் பல்கலைக்கழகத்தில் பயிலும் காஷ்மீர் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்து டெல்லியில் ஜந்தர்மந்தர் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்திய காஷ்மீரைச் சேர்ந்த மாணவர்கள் மீது இந்து மதவெறிக் கும்பல் கொலைவெறித் தாக்குதல் நடத்தியதற்கு டெல்லி போலீசும் உடந்தையாக இருந்தது.

காங்கிரசு கட்சியின் தலைமை மிதவாத இந்துத்துவா அரசியலுக்குப் பதிலாக, இந்து மதவெறி அரசியலைக் கையிலெடுத்திருப்பதைத்தான் இத்தூக்கு தண்டனைகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த நடவடிக்கைகளின் மூலம் காங்கிரசு தன்னைப் பலமான அரசாகக் காட்டிக் கொண்டு, இந்து நடுத்தர வர்க்கத்தின் ஓட்டுக்களைக் கவர்ந்துவிடவும் திட்டம் போடுகிறது. அதேசமயம், அப்சல் குரு அரசியல் நோக்கங்களுக்காகத் தூக்கில் தொடங்கவிடப்படவில்லை எனக் காட்டுவதற்காகவே, பாலாறு குண்டுவைப்பு வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட நான்கு தமிழர்களின் கருணை மனுக்களையும் அவசர அவரசமாக ரத்து செய்து, அவர்களையும் தூக்கு மேடையில் கொண்டுவந்து நிறுத்தியது, காங்கிரசு கும்பல்.

• • •

அப்சல் குருவுக்கு வழங்கப்பட்ட தூக்கு தண்டனையை ஆதரிக்கும் ஓட்டுக்கட்சிகள், பத்திரிகைகள் மட்டுமல்ல; சாதாரண பொதுமக்கள்கூட உச்ச நீதிமன்றமே அப்சலுக்கு வழங்கப்பட்ட தூக்கு தண்டனையை உறுதி செய்திருக்கிறது என வாதிட்டு வருகின்றனர். ''உச்ச நீதிமன்றம் சொல்லிவிட்டால் அதற்கு அப்பீல் இருக்க முடியாது. ஏனென்றால் உச்ச நீதிமன்றம் என்பது புனிதமான, சட்ட நுணுக்கங்களைக் கரைத்துக் குடித்த, கறைபடியாத நீதிபதிகளைக் கொண்ட அமைப்பு'' என்றவாறு பொதுமக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள பிம்பம்தான் இந்த வாதத்திற்கு அடிப்படையாக இருக்கிறது.

ஆனால், உச்ச நீதிமன்றம் ஒருதலைப்பட்சமான முறையில், நியாயத்துக்குப் புறம்பாக காவிரி நதிநீர்ப் பங்கீடு, நர்மதா அணைக்கட்டு உள்ளிட்டுப் பல்வேறு வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கியிருக்கிறது. பெரியாறு அணை வழக்கில் 142 அடி உயரத்துக்கு நீரைத் தேக்கலாம் எனத் தான் வழங்கிய தீர்ப்பையே மறுத்த கோமாளித்தனத்தையும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் அரங்கேற்றியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அளித்திருக்கும் பல தீர்ப்புகள் வழிகாட்டியாகக் கொள்ளமுடியாதபடி சுயமுரண்பாடு உடையதாக இருப்பதையும் மறுக்கமுடியாது. பல்வேறு தூக்கு தண்டனை வழக்குகளில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சட்ட அறியாமையின் காரணமாக மனம்போனபடி தீர்ப்பளித்திருப்பதும் தற்பொழுது அம்பலமாகியிருக்கிறது. நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கிலோ உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சட்ட பாயிண்டுகளைக் கொண்டு அப்சல் குருவின் தூக்கை உறுதி செய்யவில்லை.

நாடாளுமன்றத்தாக்குதல் டிசம்பர் 13, 2001 அன்று, பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின்பொழுது, அக்கூட்டணி ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்குண்டுத் திணறிக் கொண்டிருந்த சமயத்தில் நடந்தது. இத்தாக்குதலை நடத்த வந்த ஐந்து பேரும் தாக்குதலின்பொழுதே பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடந்த மறுநாளே, இந்தச் சதியில் ஈடுபட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் பலரைக் கைது செய்துவிட்டதாக அறிவித்தது, டெல்லி போலீசின் சிறப்புப் பிரிவு. தாக்குதல் நடந்த 17-வது நாளே இவ்வழக்கின் புலன் விசாரணையும் முடிவுக்கு வந்துவிட்டது.



**இட்லரின் நாஜிக் கும்பல் ஜெர்மன் நாடாளுமன்றத்தைத்தானே எரித்துவிட்டு, அந்தப் பழியை கம்யூனிஸ்டுகள் மீது போட்டது. ஆனால், அங்கு நீதிமன்ற விசாரணையின் பொழுது உண்மை வெளியே வந்துவிட்டது. இங்கோ, நாடாளுமன்றத் தாக்குதலை நடத்தியது யார்? அதன் முழுப் பின்னணி என்ன? என்ற உண்மைகள் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்தப்படும் முன்னரே, அப்சல் குரு கொல்லப்பட்டுவிட்டார்.**

இவ்வளவு விரைவாகத் தாக்குதலின் மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டதற்கு டெல்லி போலீசின் திறமை காரணமா அல்லது தாக்குதல் நடத்த வந்த 'தீவிரவாதிகளின்' சிறுபிள்ளைத்தனம் காரணமா என்பதுதான் இன்னும் விளங்காத மர்மமாக உள்ளது. ஏனென்றால், தாக்குதல் நடத்தவந்த ஐந்து பேரும் தாம் வந்த காரின் முகப்புக் கண்ணாடி மீதே, ''நாங்கள் இந்தியாவை அழிக்க விரும்புகிறோம்; முட்டாள் வாஜ்பாயியையும் அத்வானியையும் நாங்கள் கொல்வோம்'' என்றவாறு பல தீவிரவாத வாசகங்கள் அடங்கிய ''ஸ்டிக்கரை'' ஒட்டியிருந்தனர்; தீவிரவாதிகளுள் ஒருவனெனக் கூறப்படும் முகம்மது, தாக்குதலுக்குச் சற்று முன்பாக, அப்சல் குருவைக் கைபேசி வழியாக மூன்று முறை அழைத்து, ''எல்லாம் திட்டப்படி நடந்துவருவதாக''க் கூறியதை போலீசு கண்டுபிடித்திருக்கிறது. இவ்வளவு சாட்சியங்களையும் போலீசுக்குக் கொடுத்துவிட்டுத்தான் அந்த ஐந்து பேரும் மாண்டு போயுள்ளனர்.

இதனால் தாக்குதல் நடத்தியவர்கள் முட்டாள்தனமாகத் திட்டம் தீட்டினார்களா, இல்லை நாடாளுமன்றத் தாக்குதலே பா.ஜ.க. ஆட்சியில் நடத்தப்பட்ட நாடகமா என்ற சந்தேகம் இன்றுவரையிலும் தீரவில்லை. போலீசும் இராணுவமும் அப்பாவி முசுலீம்களைப் பிடித்துப் போலி மோதலில் சுட்டுக் கொன்றுவிட்டுத் தீவிரவாதிகளைக் கொன்றதாகச் செய்தி வெளியிடுகிறார்கள். அரசும் நீதிமன்றமும்கூட பலசமயங்களில் இந்தப் போலி மோதல்கொலைகளுக்கு ஆதரவாக நடந்து கொள்கின்றன. மாலேகான், சம்ஜௌதா விரைவுவண்டி குண்டுவெடிப்புகளை இந்து தீவிரவாதிகள் நடத்திவிட்டு, பழியை முசுலீம் தீவிரவாதிகள் மீது சுமத்தினார்கள். இந்தியா, பாகிஸ்தானுக்குள் உளவாளிகளை அனுப்புவதும், அங்கிருக்கும் அரசு எதிர்ப்பாளர்களுக்கு உதவுவதும்; பாகிஸ்தான் தீவிரவாதக் குழுக்களுக்குப் பயிற்சி அளித்து இந்தியாவுக்குள் அனுப்புவதும் சர்வசாதாரணமாக நடந்து வருகின்றன. முசுலீம் தீவிரவாதப் பிரச்சினை இவ்வளவு சிக்கல் நிறைந்ததாக மாற்றப்பட்டிருப்பதால், நாடாளுமன்றத் தாக்குதலை இந்த இரண்டு தரப்பில் யார் வேண்டுமானாலும் நடத்தியிருக்க கூடும்.

ஆனால், ஒரு பாரபட்சமற்ற விசாரணை தொடங்கும் முன்பே, இத்தாக்குதலின்போது கொல்லப்பட்ட ஐந்து பேரும் வைத்திருந்த அட்டைகள், இன்ன பிற சாட்சியங்களை மட்டுமே வைத்துக் கொண்டு, அப்போதைய உள்துறை அமைச்சர் அத்வானி ''அவர்கள் ஐந்து பேரும் பாகிஸ்தானியர்கள்'' எனக் கொளுத்திப் போட்டார். இந்த பாகிஸ்தான் பின்னணிக்கு வலு சேர்க்கும் விதமாக, பாகிஸ்தானிலிருந்து செயல்பட்டு வரும் ஜெய்ஷ்-இ-முகம்மது என்ற முசுலீம் தீவிரவாத அமைப்பின் தலைவர் மசூத் ஆஸார், தாரிக் அகமது மற்றும் காஸி பாபா ஆகிய மூவரும் இத்தாக்குதலின் மூளையாகச் செயல்பட்டுள்ளனர் என டெல்லி போலீசாரால் குற்றஞ்சுமத்தப்பட்டனர். சதியிலோ, தாக்குதலிலோ பங்கேற்காத, அதேசமயம் தாக்குதலுக்கு உதவியதாகச் சொல்லப்பட்ட அப்சல் குரு, எஸ்.ஏ.ஆர். கீலானி, ஷௌகத் ஹுசேன், ஷௌகத்தின் மனைவி அஃப்சான் குரு ஆகிய நால்வர் மட்டுமே இவ்வழக்கில் கைது செய்யப்பட்டனர்.

அப்சல் குருவின் இளைய சகோதரன் ஹிலாலைப் பிணைக் கைதியாகப் பிடித்து வைத்துக்கொண்டுதான், போலீசார் அப்சலிடம் விசாரணை நடத்தினர்; வாக்குமூலத்தைப் பெற்றனர். இது மட்டுமின்றி, டெல்லி சிறப்பு போலீசு வழக்கத்துக்கு மாறான மற்றும் சட்டவிரோதமான முறையில் அப்சல் குருவைத் தொலைக்காட்சி ஊடகங்களுக்கு நேரடி பேட்டி அளிக்க வைத்து,

அந்நேர்காணலில் நாடாளுமன்றத் தாக்குதலில் தனக்குப் பங்கிருப்பதாகச் சாட்சியம் அளிக்கவும் வைத்தது.

அப்சல் குருவை மிரட்டி வாக்குமூலம் பெறப்பட்டிருக்கிறது என்பது பச்சையாகவே அம்பலமாகியிருந்ததால், அதனை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. எனினும் உச்சநீதிமன்றம், ''இது போன்ற சதித் திட்டங்களிலும், தீவிரவாதத் தாக்குதல்களிலும் நேரடி சாட்சியங்களும் சதித் திட்டம் தீட்டியதை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் கிடைப்பது இயலாத ஒன்று'' எனக் கூறிவிட்டு, கிடைத்திருக்கும் சாட்சியங்களும் சூழ்நிலைகளும் அப்சல் குருவிற்கும் நாடாளுமன்றத் தாக்குதலுக்கும் தொடர்பிருப்பதை நிரூபிக்கின்றன எனத் தீர்ப்பெழுதியது.

''நாடாளுமன்றத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட காரையும், கைபேசி சிம்கார்டையும் அப்சல் குருதான் தீவிரவாதிகளுக்கு வாங்கிக் கொடுத்தார்; அவரது மடிக்கணினியில் நாடாளுமன்றத்திற்குள் தீவிரவாதிகள் நுழைவதற்காகத் தயாரிக்கப்பட்ட போலியான அடையாள அட்டைகள், உள்துறை அமைச்சகத்தின் அனுமதி பெற்றதாகக் காட்டும் போலி ரசீதுகள் தயாரிக்கப்பட்டதற்கான பதிவுகள் உள்ளன; தாக்குதலின் பொழுது கொல்லப்பட்டவர்களை அப்சல்தான் அடையாளம் காட்டினார்'' என்பவை அப்சல் குருவுக்கு எதிராக போலீசு முன்வைத்த முக்கிய சாட்சியங்கள்.

இந்த சாட்சியங்களுக்கும் அப்சல் குருவுக்குமான தொடர்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை; மேலும், விசாரணையின்பொழுது அப்சல் குருவுக்கு எதிராகக் கூண்டில் நிறுத்தப்பட்ட சிம் கார்டை விற்றவர், காரை விற்றவர் போன்ற சாட்சியங்கள் போலீசால் தயாரிக்கப்பட்டவை என்பதும் பளிச்செனத் தெரிந்தது.

நாடாளுமன்றத் தாக்குதல் நாட்டின் மீது தொடுக்கப்பட்ட போர் என ஊதிப் பெருக்கப்பட்டு, பாக். மீது போர் தொடுக்கும் நடவடிக்கைகளை எடுத்தது பா.ஜ.க. கூட்டணி அரசு. ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புகள் எல்லையோரத்தில் நிறுத்தப்பட்டனர். இந்தச் சூழ்நிலைகளுக்கு இடையே நடந்துவந்த விசாரணையிலோ, எஸ்.ஏ.ஆர். கீலானியும் அஃப்சான் குருவும் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டனர்; ஷௌஹத் ஹுசேனுக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையைப் பத்தாண்டு தண்டனையாக உச்சநீதிமன்றம் குறைத்தது. விசாரணை நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட நால்வரில் இப்பொழுது எஞ்சியிருப்பது அப்சல் குரு மட்டும்தான்.

அப்சல் குரு தனது ஏழ்மை நிலை காரணமாக, தடா சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடந்தபொழுது திறமையான வழக்குரைஞர்களை வைத்து வாதாட முடியாமல் இருந்தார். அவருக்காக வாதாட அரசு நியமித்த நீரஜ் பன்சால் என்ற வழக்குரைஞர் அனுபவமில்லாதவர் என்பதோடு, அவர், கொல்லப்பட்ட தீவிரவாதிகளை அப்சல் அடையாளம் காட்டியதை - அப்சலுக்கு எதிராக போலீசு முன்வைத்த இந்த முக்கிய சாட்சியத்தைக் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொண்டார். போலீசின் இந்த சாட்சியத்தை உடைக்காமல் ஏற்றுக் கொண்டதன் மூலம் அப்சலின் கழுத்தில் சுருக்கு விழுவதற்குப் பாதை போட்டுக் கொடுத்தார், அந்த இளம் வழக்குரைஞர்.

இவருக்குப் பதிலாக வேறு சில வழக்குரைஞர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுள் ஒருவரைத் தனக்கு நியமிக்கும்படி அப்சல் கோரினார். ஆனால், அப்சலுக்காக வாதாட முன்வந்தால், இந்து மதவெறிக் கும்பல் தங்களைத் தாக்கக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக அவர்களுள் ஒருவர்கூட அப்சலின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. சட்ட அறிவோ, அனுபவமோ இல்லாத அப்சல், தனக்கு எதிரான சாட்சியங்களைத் தானே குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய கையறு நிலைக்குத் தள்ளப்பட்டார்.


''காஷ்மீரின் சிறப்பு அதிரடிப் படையுடன் நெருங்கிய தொடர்புடைய தாரிக் என்பவன்தான், தாக்குதலில் கொல்லப்பட்ட முகம்மதுவை என்னிடம் அறிமுகப்படுத்தினான். அப்படையைச் சேர்ந்த திராவிந்தர் சிங் என்ற அதிகாரியும் தாரிக்கும் கூறியபடிதான் முகம்மதுவை டெல்லிக்கு அழைத்துவந்து வீடு பார்த்துக் கொடுத்தேன்; கார் வாங்கிக் கொடுத்தேன்; எனது குடும்பத்தாரைப் பிணைக் கைதியாகப் பிடித்து வைத்துக் கொண்டு மிரட்டியதையடுத்துதான், நான் கொல்லப்பட்டவர்களை போலீசு சொல்லிக் கொடுத்தபடி அடையாளம் காட்டினேன்'' என அப்சல் கதறியதை எந்தவொரு நீதிமன்றமும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

இந்த வழக்கில் அப்சலுக்கு எதிராக வலுவான, நேரடியான சாட்சியங்கள் இல்லை. சந்தர்ப்ப சாட்சியங்களோ அவருக்குத் தாக்குதலில் நேரடித் தொடர்பு இருப்பதைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை. மேலும், அச்சாட்சியங்கள் முரண்பாடுகள் நிறைந்ததாகவும் இருந்தன. இந்த நிலையில் அவருக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை உறுதி செய்வதற்கு உச்ச நீதிமன்றம் சட்டத்திற்குப் பதிலாக செண்டிமெண்டுக்குள் புகுந்து கொண்டது. ''இந்த நிகழ்ச்சி முழு தேசத்தையும் உலுக்கியிருக்கிறது. குற்றவாளிக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டால்தான் சமூகத்தின் கூட்டு மனசாட்சி சமாதானம் அடையும்'' எனத் தீர்ப்பெழுதினார்கள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள்.

இட்லரின் நாஜிக் கும்பல் ஜெர்மன் நாடாளுமன்றத்தைத் தானே எரித்துவிட்டு, அந்தப் பழியை கம்யூனிஸ்டுகள் மீது போட்டது. ஆனால், அங்கு நீதிமன்ற விசாரணையின்பொழுது உண்மை வெளியே வந்துவிட்டது. இங்கோ, நாடாளுமன்றத் தாக்குதலை நடத்தியது யார்? அதன் முழுப் பின்னணி என்ன? என்ற உண்மைகள் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்தப்படும் முன்னரே, அப்சல் குரு கொல்லப்பட்டுவிட்டார்.

• • •

1980-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் நடந்த பச்சன் சிங் எதிர் பஞ்சாப் மாநில அரசு என்ற வழக்கில்,



கருணை மனுக்கள் மீது முடிவெடுக்க காலதாமதமானதையடுத்து, தமது தூக்கு தண்டனையை ரத்து செய்யக் கோரி வழக்குத் தொடுத்திருக்கும் (இடமிருந்து) தேவேந்தர் பால் சிங் புல்லர், முருகன், பேரறிவாளன், சாந்தன்.

''அரிதினும் அரிதான வழக்கிலும்கூட, வேறு தண்டனை வழங்க முடியாது என்பதைக் கேள்விக்கிடமற்ற முறையில் நிரூபித்த பிறகுதான், தூக்கு தண்டனை வழங்க வேண்டும்'' எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. 1980-க்கு முன்பு வரை கொலைக்குக் கொலைதான் தண்டனை என்ற வகையில் கொலைக் குற்றங்களுக்கெல்லாம் தூக்கு தண்டனையை மட்டுமே அளித்து வந்த இந்திய நீதிமன்றங்கள், அதன் பின் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு பச்சன் சிங் வழக்கின் தீர்ப்பைத்தான் முன்மாதிரியாகக் கொள்வதாகக் கூறிவருகின்றன.

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இருவர் விடுவிக்கப்பட்டு, ஒருவரின் தண்டனை பத்தாண்டாகக் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அப்சல் குருவிற்கு பச்சன் சிங் வழக்கு தீர்ப்பின்படிதான் தூக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா?

ஒரு குற்றவாளிக்கு தண்டனை அளிப்பது மட்டும்தான் சட்டப்படி நடக்கிறது; ஆனால், ஒருவனைக் குற்றவாளியாகத் தீர்மானிப்பது எல்லா நேரத்திலும் சட்டப்படி நடப்பதில்லை. நீதிபதியின் மனதில் மறைந்திருக்கும் அரசியல் கருத்துக்கள், ஒருதலைப்பட்சமான அவரின் சொந்த விருப்பு-வெறுப்புகள், கேள்வி கேட்க முடியாத அவரது சிறப்பு அதிகாரம் ஆகியவையும் குற்றவாளியைத் தீர்மானிப்பதில் பங்கு வகிக்கின்றன.

நாடாளுமன்றத் தாக்குதலில் அப்சல் குருவுக்கு நேரடித் தொடர்பு இல்லை என்பது நிரூபணமான பிறகும் அவருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்படுகிறது; உறுதி செய்யப்படுகிறது. பாபர் மசூதி இடிப்பு சதி வழக்கிலோ, அச்சதியில் அத்வானி, ஜோஷி, உமா பாரதி உள்ளிட்ட இந்து மதவெறிக் கும்பலின் தலைவர்களுக்கு நேரடிப் பங்கிருப்பது உலகிற்கே தெரிந்திருந்தும், அலகாபாத் உயர் நீதிமன்றம் அவர்களைச் சதி வழக்கிலிருந்து விடுதலை செய்கிறது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கிலோ, ''நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்படாதவரை, பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தேசிய சதிச்செயல் எனக் கூறக் கூடாது'' எனக் கூறும் அளவிற்கு நீதிபதிகளிடம் இந்து மதவெறிப் பாசம் பொங்கி வழிகிறது.

ஒரிசா மாநிலத்தில் இந்து மதவெறிக் கும்பல் ஸ்டேன்ஸ் பாதிரியாரையும் அவரது இரண்டு மகன்களையும் உயிரோடு கொளுத்திய வழக்கில், முதன்மைக் குற்றவாளியான தாரா சிங்குக்கு விசாரணை நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தூக்கு தண்டனையை, ஒரிசா உயர் நீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. உச்ச நீதிமன்றம் ஒரிசா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்ததோடு, ''ஸ்டேன்ஸ் பாதிரியார் ஒரிசாவின் மனோகர்பூர் பகுதியில் மதமாற்றத்தில் ஈடுபட்டு வருகிறார்; அதற்கு ஒரு பாடம் புகட்டுவதற்காகத்தான் இக்குற்றம் நிகழ்த்தப்பட்டுள்ளது'' எனக் கூறியதோடு, மத மாற்றத்தை இந்துத்துவா நோக்கிலிருந்து கண்டித்தது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, குற்றத்தின் தீவிரத்தன்மையையே நீர்த்துப் போகச் செய்தது.

குஜராத் முசுலீம் படுகொலைகளின்பொழுது நடந்த நரோடா பாட்டியா படுகொலை வழக்கில், அப்படுகொலையின் முதன்மைக் குற்றவாளியும் மோடிக்கு நெருக்கமானவருமான கோத்நானிக்குத் தூக்கு தண்டனை அளிக்க மறுத்தது, சிறப்பு நீதிமன்றம். ''உலகெங்கும் தூக்கு தண்டனைக்கு எதிரான கருத்து மேலோங்கி வருவதால், குற்றவாளிக்குத் தூக்கு தண்டனை அளிக்க முடியாது'' என விளக்கமளித்தார், நீதிபதி. இந்த விளக்கம் அப்சல் குருவுக்குப் பொருந்தாமல் போனதற்குக் காரணம், அவர் முசுலீம் என்பது தவிர வேறென்னவாக இருக்க முடியும்?

சந்தோஷ்குமார் பரியார் வழக்கு மற்றும் சங்கீத் வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் அமர்வு மன்றங்கள், 1980-க்குப் பின் உச்ச நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தூக்கு தண்டனை தீர்ப்புகளை ஆராய்ந்து, ''அரிதினும் அரிதான வழக்கு என்பதற்கு மனம்போன போக்கில் பொருள் கொள்ளப்பட்டு மரண தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாக'' தமது தீர்ப்புகளில் கூறியுள்ளன. சந்தோஷ்குமார் பரியார் வழக்கின் தீர்ப்பில் உச்ச நீதி

> **ஆளுக்குத் தக்கபடியும் சட்ட அறிவு இல்லாமலும்தான் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளிக்கிறார்கள் எனும்பொழுது; உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மத்தியிலும் பெட்டி வாங்கிக்கொண்டு தீர்ப்பு அளிக்கும் நீதிபதிகள் இருப்பது அம்பலமாகியிருக்கும்பொழுது, இந்நீதிமன்றத்தை உயரியதாகவும், அம்மன்றம் அளிக்கும் தீர்ப்புக்கு அப்பீலே கிடையாது என்றும் எப்படி சொல்ல முடியும்?**

மன்றத்தால் மரண தண்டனை அளிக்கப்பட்டுள்ள ஏழு வழக்குகளின் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, இவ்வேழு தீர்ப்புகளும் நீதிபதிகளின் சட்ட அறியாமையால் அளிக்கப்பட்ட தவறான தீர்ப்புகள் எனக் கூறியிருக்கிறது, உச்ச நீதிமன்ற அமர்வு. தவறாக அளிக்கப்பட்ட இத்தீர்ப்புகளின் அடிப்படையில் ஏற்கெனவே இரண்டு பேர் தூக்கிலிடப் பட்டுவிட்டனர்.

சட்ட அறியாமை என மெலிதாகக் கண்டிக்கப்படும் நீதிபதிகளின் இந்த மனப்பாங்கு, அவர்களின் தன்னிச்சையான அதிகாரத் திமிர் தவிர வேறல்ல. கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த சாய்பண்ணா என்பவருக்கும்; பாலாறு குண்டுவெடிப்பில் தண்டிக்கப்பட்ட சைமன், ஞானப்பிரகாசம், மாதையன், பிலவேந்திரன் ஆகிய நால்வருக்கும் கீழ்நீதிமன்றங்களில் அளிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை உச்ச நீதிமன்றம் மரண தண்டனையாக உயர்த்தியதை, இந்த அதிகாரத்திமிருக்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

குறிப்பாக, பாலாறு குண்டு வெடிப்பு வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என கர்நாடகா அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையிடுகிறது. அவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தின் அமர்வால் தள்ளுபடி செய்யப்படுகிறது. அதேசமயம், அவ்வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் தீர்ப்பை எதிர்த்து முறையிட்ட வழக்கை, உச்ச நீதிமன்றத்தின் மற்றொரு அமர்வு தானாகவே முன்வந்து ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு மரண தண்டனை அளிக்கிறது.

அ.தி.மு.க. குண்டர்கள் கோயமுத்தூர் விவசாயக் கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவிகளை எரித்துக் கொன்ற வழக்கிலோ உச்ச நீதிமன்றம் வேறொரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது. இவ்வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட அ.தி.மு.க.வைச் சேர்ந்த மூன்று பேரும் இத்தண்டனையை எதிர்த்துத் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட உடனேயே அக்குற்றவாளிகள் இதனை எதிர்த்தும் மறுஆய்வு மனுவைத் தாக்கல் செய்தனர். இம்மறுஆய்வு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்சநீதிமன்றம், அரிதினும் அரிதான அப்பயங்கரவாத வழக்கை விரைவாக விசாரிக்காமல், கடந்த இரண்டு ஆண்டுகளாக இழுத்தடித்து வருகிறது.

கொடைக்கானல் விடுதி வழக்கில் பார்ப்பன ஜெயாவை நீதிமன்றம் தண்டித்ததைக் கண்டிப்பது என்ற பெயரில்தான் இப்படுகொலையே நடந்தது. அப்சல் குரு, அஜ்மல் கசாப் ஆகியோரின் தூக்கு தண்டனையை ஆதரிக்கும் பா.ஜ.க., சோ ராமஸ்வாமி உள்ளிட்ட பார்ப்பன-பாசிசக் கும்பல், இந்த மூவருக்கு அளிக்கப் பட்டுள்ள தூக்கு தண்டனையை உடனே நிறைவேற்ற வேண்டும் எனக் கோர முன்வருமா? இந்த மூன்று குற்றவாளிகளுக்குச் சட்ட, பண உதவிகளைச் செய்துவரும் அ.தி.மு.க. தலைமையை அம்பலப்படுத்தத் துணியுமா?

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் தூக்கு தண்டனையை உறுதி செய்த உச்ச நீதிமன்ற அமர்வின் தலைவராக இருந்த நீதிபதி கே.டி. தாமஸ், தான் பணி ஓய்வுபெற்ற பிறகு செப்.2, 2011 அன்று ‘‘தி ஏசியன் ஏஜ்’’ என்ற நாளிதழைச் சேர்ந்த செய்தியாளரிடம், ‘‘தான் அவ்வாறு மரண தண்டனை வழங்கிய ஆயத்திற்கு தலைமை தாங்க நேர்ந்தது கெடுவாய்ப்பானது’’ என நொந்து கொண்டதோடு, ‘‘கொலையுண்டவர் புகழ்பெற்றவராக இருந்தால், அவ்வழக்கில் மரண தண்டனை வழங்குவது அடிக்கடி நடக்கிறது. அக்கொலையை அரிதிலும் அரிதான ஒன்றாகச் சித்தரித்துத் தங்களது முடிவை நியாயப் படுத்துவது நடக்கிறது’’ என்றும் கூறியிருக்கிறார்.

குற்றவாளி ஏழையாக இருந்தால், தாழ்த்தப்பட்டவராக, சமூகத்தின் அடித்தட்டைச் சேர்ந்தவராக இருந்தால், முசுலீம் தீவிரவாதி எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தால், அதிகபட்ச தண்டனை; குற்றவாளி பணக்காரனாக, ஆதிக்க சாதியைச் சேர்ந்தவனாக, இந்து தீவிரவாதியாக, அரசியல் செல்வாக்கு மிக்கவனாக இருந்தால் அவனுக்கு வேறு மாதிரியான தீர்ப்பு என ஆளுக்குத் தக்கபடியும் சட்ட அறிவு இல்லாமலும்தான் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளிக்கிறார்கள் எனும்பொழுது; உச்சநீதிமன்ற நீதிபதிகள் மத்தியிலும் பெட்டி வாங்கிக்கொண்டு தீர்ப்பு அளிக்கும் நீதிபதிகள் இருப்பது அம்பலமாகியிருக்கும்பொழுது இந்நீதிமன்றத்தை எப்படி உயரியதாகவும் அம்மன்றம் அளிக்கும் தீர்ப்புக்கு அப்பீலே கிடையாது என்றும் சொல்ல முடியும்? இந்த உண்மைகள் யாவும் சாதாரண மாஜிஸ்டிரேட் கோர்ட் நீதிபதிகளுக்கும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது என்பதை அல்லவா நிரூபிக்கின்றன.

நீதிமன்றங்களை விமர்சிக்கும் உரிமை யாருக்கும் இல்லை என்ற சட்டப் பாதுகாப்பின் கீழ்தான் அவற்றின் ‘புனிதம்’ பாதுகாக்கப்படுகிறதேயொழிய, அரசின் மற்ற உறுப்புகளைப் போலவே நீதிமன்றங்களும் சீரழிந்து, தீர்ப்பளிக்கும் தார்மீக பலத்தை இழந்துதான் நிற்கின்றன.

● செல்வம்

# பாலாறு குண்டு வெடிப்பு வழக்கும் நீதிமன்ற பயங்கரவாதமும்

**நான்கு தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட தூக்கு தண்டனை உச்ச நீதிமன்றத்தின் தான்தோன்றித்தனமான அதிகாரத்திமிரைத்தான் எடுத்துக்காட்டுகிறது.**

இந்துத்துவ மனசாட்சியைத் திருப்திப்படுத்த அப்சல் குருவைத் தூக்கில் போட்டதை மறைத்து, சட்டத்தின் ஆட்சிப்படியே அவர் தூக்கிலிடப்பட்டுள்ளார் என்று காட்டுவதற்காகவே, இப்போது வீரப்பன் கூட்டாளிகள் எனப்படுவோரை அவசரமாகத் தூக்கில் போடத் துடிக்கிறது இந்திய அரசு.

1993-இல் மேட்டூரை அடுத்த பாலாறு பகுதியில் வீரப்பனால் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் வனத்துறையினர், போலீசார் உள்ளிட்டு 22 பேர் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் 124 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, கர்நாடக மாநிலம் மைசூர் தடா நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது. இதில் 117 பேர் குற்றமற்றவர்கள் என்று அப்போதே விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும், போலீசைத் திருப்திபடுத்துவதற்காகவே 7 பேர் மீது பொய்க்குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அதை கர்நாடக உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியது. பின்னர், அப்பாவிகளான அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த போது, அதில் மூவரை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது.

வீரப்பன் கூட்டாளிகளாகச் சித்தரிக்கப்பட்ட எஞ்சிய நால்வருக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும் என கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டது. அவ்வழக்கு உச்சநீதிமன்றத்தின் அமர்வு நீதிபதிகளால் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர், 2004 ஜனவரியில் கொலைவெறி பிடித்த உச்ச நீதிமன்றத்தின் மற்றொரு அமர்வு, ஆயுள் தண்டனையை மரண தண்டனையாக உயர்த்தித் திமிராகத் தீர்ப்பளித்தது. பொய்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள இந்நால்வரும் ஏழைகள், சமூகத்தின் அடித்தட்டைச் சேர்ந்தவர்கள் என்பதாலேயே அதிகாரத் திமிரோடு நீதிபதிகள் அவர்களைத் தூக்குமேடையில் நிறுத்தினர்.

இதையடுத்து கர்நாடகத்தின் பெல்காம் சிறையிலுள்ள இந்நால்வரும் அரசுத் தலைவரிடம் கருணை மனுக்களைத் தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் கடந்த 9 ஆண்டுகளாக எந்த முடிவும் எடுக்கப்படாமல் நிலுவையில் இருந்தன. இந்தக் கருணை மனுக்களை, கடந்த பிப்ரவரி 11 அன்று அரசுத் தலைவர் ''தூக்குத்தூக்கி'' பிரணாப் முகர்ஜி நிராகரித்துள்ளார்.

தடா சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில்தான் இவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வீரப்பன் கூட்டாளிகளாகச் சித்தரிக்கப்பட்ட இந்நால்வர் மீது நான்கு வழக்குகள் பதிவாகியிருந்தன. அவற்றில் 3 வழக்குகளில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஒரு வழக்கில் மட்டுமே அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கிலும், இந்நால்வரையும் வீரப்பனுடன் பார்த்ததாக 'என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட்' என்று போலீசு வெறியர்களால் புகழப்படும் எஸ்.பி. கோபாலகிருஷ்ணன் கூறியதை எந்த விசாரணையுமின்றி அப்படியே ஏற்றுக் கொண்டு நீதிபதிகள் அநியாயமாகத் தீர்ப்பு எழுதியுள்ளனர். அதேசமயம், நீதிபதி சதாசிவம் கமிசன் விசாரணையில் வெளிச்சத்துக்கு வந்த அதிரடிப் படையின் அட்டூழியங்களுக்குப் பொறுப்பான போலீசு அதிகாரிகள் எவர் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்க அந்நீதிபதிகள் முன்வரவில்லை.

பயங்கரவாத தடா சட்டத்தின்படி, குற்றம் சாட்டப்பட்டவரே தன்னை நிரபராதி என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும். அங்கு போலீசு கூறுவதுதான் சாட்சியமாகும். இதுதான் தடா பயங்கரம். இக்கொடிய தடா சட்டம்

நீதிமன்ற பயங்கரவாதம்: தூக்குக் கயிற்றின் நிழலில் நிறுத்தப்பட்டுள்ள பிலவேந்திரன், சைமன், மாதையா மற்றும் ஞானப்பிரகாசம்.



தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதாலேயே அச்சட்டம் காலாவதியாக்கப்பட்டுள்ளது. தடா சட்டமே அநீதியானது எனும்போது, காலாவதியான அச்சட்டத்தின்கீழ் நடந்த விசாரணையின்படி தண்டிப்பது அதைவிடப் பெரிய அநீதி.

வீரப்பனுடன் எவ்விதத்திலும் தொடர்பில்லாத அப்பாவிகளான இவர்களை, அவர்களது வீடுகளிலிருந்தும், பொது இடத்திலிருந்தும்தான் போலீசு இழுத்துச் சென்றுள்ளது. தோமையார்பாளையம் சர்ச்சில் வேலை பார்த்து வந்தவரான ஞானப்பிரகாசத்தை மாதாகோயிலிலிருந்து அதிரடிப்படையினர் இழுத்துச் சென்றதாக பாதிரியார் வின்சென்ட் டிசோசா பகிரங்க வாக்குமூலமே கொடுத்துள்ளார். ''பாலாறு வெடிகுண்டுத் தாக்குதலில் எஸ்.பி. கோபாலகிருஷ்ணனுக்குக் காலில் அடிபட்டு மயக்கமாகிவிட்டார். மயங்கிய நிலையில் இருந்த அவர் எப்படி நான்கு பேரை அடையாளம் கண்டிருக்க முடியும்? மேலும், நீதிமன்றத்தில் கோபாலகிருஷ்ணனைத் தவிர வேறு எவரும் இந்நால்வரையும் பார்த்ததாகச் சொல்லவுமில்லை. ஒருவரது சாட்சியை வைத்துதான் இப்படி அநியாயமாக தண்டனை வழங்கப்பட்டுள்ளது'' என்று பாலாறு தாக்குதலின்போது வீரப்பனுடன் காட்டில் இருந்த அவரது மனைவி முத்துலட்சுமி குமுதம் ரிப்போர்ட்டர் இதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும், இவர்கள் மைசூர் உயர்நீதிமன்றம் விதித்த ஆயுள்தண்டனையை அனுபவித்து வரும்போதே, உச்சநீதிமன்றம் அநியாயமாகத் தூக்குத் தண்டனையை விதித்துள்ளது. இவர்களது கருணை மனுவும் 9 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் நிராகரிக்கப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் கடந்த 19 ஆண்டுகளாகச் சிறையில் இருப்பதாலும், அதிலும் கடந்த 9 ஆண்டுகளாக கருணை மனு மீதான முடிவு தெரியாமல் அவர்கள் காத்திருந்ததால், இது அவர்களின் உரிமையை மீறுவதாக அமைந்துள்ளது என்ற அடிப்படையில் தூக்கு தண்டனையை ரத்துசெய்து ஆயுள்தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்குரைஞர்கள் வாதிட்டனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றவர்களும், பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த புல்லரும் கருணை மனு மீது முடிவெடுக்க பல ஆண்டுகள் தாமதமாவதைச் சுட்டிக்காட்டி நீதி மன்றத்தை நாடியுள்ளனர். இது தொடர்பான விசாரணை முடிவடைந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அத்தீர்ப்பை எதிர்பார்த்து ஆறு வாரங்களுக்கு இந்த வழக்கை ஒத்திவைப்பதாக நீதிபதி அல்தாமஸ் கபீர் அடங்கிய பெஞ்ச் உத்தரவிட்டுள்ளது.

சமூகத்தின் கூட்டுத்துவ மனசாட்சி என்று கூறி அப்சல் குருவைத் தூக்கில் போட்டது போல, போலீசின் மனசாட்சியைத் திருப்திபடுத்தவே வீரப்பன் கூட்டாளிகள் என்று கூறி அப்பாவிகள் நால்வரைத் தூக்கில் போடத் துடிக்கிறது இந்திய அரசு. பாசிச ஜெயாவோ, வீரப்பன் வேட்டையில் ஈடுபட்ட போலீசாருக்கு பணமும், பரிசுகளும் பதவி உயர்வும் அளித்து போலீசின் அட்டூழியங்களை உறுதிப்படுத்துகிறார். இதுதான் சட்டத்தின் பெயரால் நடக்கும் காட்டுதர்பார் ஆட்சியின் மகிமை.

● குமார்

# பொது வழித்தட ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

தருமபுரி மாவட்டம் பெரும்பாலையை அடுத்துள்ள காவாக்காடு, பாப்பாங்கிணறு கிராமங்களின் அருகிலுள்ள இட்டேரி வழித்தடத்தை இவ்வட்டார மக்கள் பல தலைமுறைகளாகப் பயன்படுத்தி வந்தனர். இந்தப் பொதுவழித் தடத்தை காவாக்காடு கிராமத்தைச் சேர்ந்த குமாரசாமி என்பவன் போலீசு மற்றும் வருவாய்த் துறையின் நேரடி - மறைமுக ஆதரவுடன் கல் நட்டு, கம்பி வேலி போட்டு ஆக்கிரமித்துள்ளான். இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும்பாலை போலீசு நிலையத்திலும், பென்னாகரம் வட்டாட்சியரிடமும் பலமுறை புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கடந்த பிப்ரவரி 4-ஆம் தேதியன்று அந்த வழித்தடத்தில் ஆடு-மாடுகளை ஓட்டிச் சென்ற தாழ்த்தப்பட்ட மக்களை கொடிய ஆயுதங்களைக் கொண்டு அவன் மிருகத்தனமாகத் தாக்கியதைத் தொடர்ந்து, இக்கொடுஞ்செயலை எதிர்த்து துண்டுப் பிரசுரங்களுடன் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட பென்னாகரம் வட்ட வி.வி.மு., அதன் தொடர்ச்சியாக 11.2.2013 அன்று பெரும்பாலை பேருந்து நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த போலீசிடம் விண்ணப்பித்தது. கடைசி நேரத்தில் போலீசு அனுமதி மறுத்த நிலையில், நூற்றுக்கணக்கான உழைக்கும் மக்களை அணிதிரட்டி, செங்கொடிகள் விண்ணில் உயர, தடையை மீறி வி.வி.மு. தோழர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். காவாக்காடு வி.வி.மு. தோழர் சுப்பிரமணி தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, பெண்கள்-குழந்தைகள் உள்ளிட்டு முன்னணித் தோழர்கள் நூறு பேரைப் போலீசு கைது செய்தது.

இப்போராட்டத்தாலும், இந்த வழித்தட ஆக்கிமிரப்பை எதிர்த்து மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் உதவியுடன் வி.வி.மு. வழக்கு தொடுத்துள்ளதாலும், 14.2.2013 அன்று இந்த வழித்தடத்தைப் பார்வையிட மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர், வட்டாட்சியர், நில அளவையாளர் , கிராம நிர்வாக அதிகாரி - என ஒரு பெரும் அதிகார வர்க்கப் பட்டாளமே இக்கிராமத்துக்கு வந்திறங்கியது. இந்த வழித்தடத்தை அளந்து கொடுக்குமாறு உத்தரவிட்டதோடு, சட்டவிரோதமாக நிலத்தை ஆக்கிரமித்துள்ள ரவுடி குமரசாமி ஒரு இலட்ச ரூபாய் அபராதம் கட்ட வேண்டுமென வருவாய் அலுவலர் ஆணையிட்டுள்ளார். அதிகார வர்க்கப் படையை அடிப்படை வசதிகளற்ற ஒரு கிராமத்திற்கு இழுத்த வி.வி.மு.வின் போர்க்குணமிக்க இப்போராட்டம், இவ்வட்டாரமெங்கும் பரபரப்புடன் பேசப்பட்டு, வி.வி.மு. மீது புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

-பு.ஜ. செய்தியாளர், பென்னாகரம்

# பெண்கள் மீதான வன்கொடுமைகள்:

# அரசமைப்பே குற்றவாளி!

**இராணுவம் – போலீசு உள்ளிட்ட அதிகாரவர்க்க காமுகர்களைக் காப்பாற்றும் நோக்கில்தான் வல்லுறவுத் தடுப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.**

டெல்லி வல்லுறவுக் கொலையைத் தொடர்ந்து எழுந்த போராட்டத்தையும் அரசுக்கு எதிரான பொதுக் கருத்தையும் சமாளிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்ட வர்மா கமிசன், ஒரு மாதத்தில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்து விடும் என்று மத்திய அரசு எதிர்பார்க்கவில்லை போலும். பெண்கள் மீதான வன்கொடுமைகளைத் தடுப்பதற்கேற்ற வகையில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தில் மாற்றங்கள் செய்வது உள்ளிட்ட பரிந்துரைகளை வழங்குவதே இந்தக் கமிசனுக்குத் தரப்பட்ட பணி. இதற்குத் தேவையான தரவுகளையும் ஆலோசனைகளையும் கொடுக்க வேண்டியவர்கள் போலீசு மற்றும் சமூகநலத்துறையின் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள்.

ஆனால் மத்திய அரசின் சார்பிலோ, எந்தவொரு மாநில அரசின் சார்பிலோ ஒருவர்கூட வர்மா கமிசன் முன் ஆஜராகவுமில்லை, கருத்தை அனுப்பவுமில்லை. நாடு முழுவதும் மட்டுமின்றி, உலகம் முழுவதும் சந்தி சிரித்துவிட்ட இப்பிரச்சினையின் மீது அரசாங்கமும் அதிகாரவர்க்கமும் காட்டியிருக்கும் அலட்சியத்திற்கு இதை விட வேறு சான்று தேவையில்லை. இருப்பினும் இப்பிரச்சினையில் அக்கறை கொண்ட பெண்கள் அமைப்புகள், சட்ட வல்லுநர்கள் மற்றும் தன்னார்வக் குழுக்களின் உதவியுடன் தனது அறிக்கையை இக்கமிசன் விரைந்து சமர்ப்பித்துவிட்டது.

அதன் பரிந்துரைகள் பல போலீசு, இராணுவம், அதிகாரவர்க்கம், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ''காப்'' பஞ்சாயத்துத் தலைவர்கள் உள்ளிட்ட பலரையும் இக்கட்டில் ஆழ்த்துவதாக இருந்ததால், அத்தகைய பரிந்துரைகளை வடிகட்டிவிட்டு, ஒரு அவசரச் சட்டத்தையும் அரசு பிறப்பித்திருக்கிறது. தனது 'அவசரத்துக்கு' அரசு அளித்த விளக்கம் நகைப்புக்குரியது. கமிசன் அறிக்கையை நாடாளுமன்றத்தில் விவாதித்துச் சட்டமாக்கி அதற்கு அரசுத்தலைவரின் ஒப்புதலையும் பெற்ற பிறகுதான் சட்டம் அமலுக்கு வரும் என்பதால், இந்த இடைப்பட்ட காலத்தில் பல குற்றவாளிகள் பழைய சட்டத்தின் ஓட்டைக்குள் புகுந்து தப்பித்து விடுவார்கள் என்றும், அதனை அனுமதிக்கக் கூடாது என்பதற்காகத்தான் அவசரச் சட்டம் கொண்டு வந்திருப்பதாகவும் இதற்கு விளக்கமளித்தார், ப.சிதம்பரம்.

அவர் கூறியதற்கு மாறாக, எந்தெந்த வல்லுறவுக் குற்றவாளிகளெல்லாம் 'சிக்கிக் கொள்ளக் கூடாது' என்று அரசு கருதுகிறதோ, அவர்களையெல்லாம் தப்பிக்க வைப்பதற்காகவே இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வர்மா கமிசன் அறிக்கையையும் மத்திய அரசின் அவசரச் சட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.




மைய அரசு கொண்டு வந்துள்ள பாலியல் வல்லுறவுக்கு எதிரான அவசரச் சட்டத்தின் மோசடித்தனங்களை அம்பலப்படுத்திப் பல்வேறு மகளிர் அமைப்புகள் இணைந்து டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

முதலாவதாக, பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் இழைப்பதில் முதலிடத்தில் இருக்கும் இராணுவம், துணை இராணுவப் படைகள் மற்றும் போலீசாரைத் தப்பிக்க வைப்பது எப்படி என்பது அரசின் கவலை. 1958 -இல் மத்திய அரசு இயற்றிய ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் அமலில் இருக்கும் பகுதிகளில் - அதாவது 7 வடகிழக்கிந்திய மாநிலங்கள் மற்றும் காஷ்மீரில் - சந்தேகப்படுகின்ற யாரையும் சுட்டுக் கொல்லும் அதிகாரம், எந்த வீட்டுக்குள்ளும் நுழைந்து சோதனை போடும் அதிகாரம், யாரையும் கடத்திச் செல்லும் அதிகாரம்

இராணுவத்துக்கும், துணை இராணுவப் படைகளுக்கும் இருக்கிறது. இந்தப் பகுதிகளில் கொலை, சித்திரவதை, பாலியல் வல்லுறவு, திருட்டு போன்ற எத்தகைய குற்றங்களை இராணுவத்தினரோ, துணை இராணுவப் படையினரோ இழைத்தாலும் அவர்கள் மீது அரசோ, நீதிமன்றமோ எவ்வித நடவடிக்கையையும் எடுக்க முடியாது. அதற்கான அதிகாரம் இராணுவத்தினருக்கு மட்டுமே உண்டு என்பதுதான் இச்சட்டம். இச்சட்டத்தின் பாதுகாப்புடன் இராணுவப்படைகள் நடத்தி வரும் கொலைகள், வல்லுறவுகளுக்கு கணக்கே இல்லை.



காஷ்மீரிலுள்ள ஷோபியான் என்ற ஊரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுத்திக் கொலை செய்த இராணுவத்தினரைக் கைது செய்து தண்டிக்கக் கோரி நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

2004-ஆம் ஆண்டில் மக்கள் விடுதலைப் படையின் தீவிரவாதி என்று பொய்க்குற்றம் சாட்டி மணிப்பூரில் தங்ஜம் மனோரமா என்ற பெண்ணைக் கைது செய்து, கும்பல் வல்லுறவுக்கு ஆளாக்கி, பெண் உறுப்பிலேயே சுட்டுத் தெருவில் வீசினர் அசாம் துப்பாக்கிப் படையினர். இதனையொட்டி, ''இந்திய இராணுவமே எங்களையும் வல்லுறவுகொள்'' என்று எழுதிய பதாகையைப் பிடித்தபடி மணிப்பூர்தாய்மார்கள் நடத்திய போராட்டம் இராணுவத்தின் யோக்கியதையை உலகுக்கே அம்பலப்படுத்தியது. ''ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்'' என்று 2004-ஆம் ஆண்டு முதல் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தி வருகிறார், ஐரோம் சர்மிளா என்ற பெண்.

1991-இல் காஷ்மீரில் குனான் போஷ்பாரா கிராமத்தில் 18 வயது முதல் 80 வயது வரையிலான பெண்கள் அனைவரையும் வல்லுறவுக்கு ஆளாக்கியது ராஜஸ்தான் ரைபிள்ஸ் படை. 2009-இல் ஷோபியான் கிராமத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு பெண்களை வல்லுறவுக்கு ஆளாக்கி க் கொலையும் செய்தது இந்திய இராணுவம். தண்டனைக்கு அப்பாற்பட்டவர்களாக இராணுவக் கிரிமினல்களைப் பாதுகாக்கும் இக்கொடிய சட்டத்தை அகற்ற வேண்டுமென்று காஷ்மீர் மற்றும் வடகிழக்கிந்திய மாநிலங்களின் அரசுகள் பலமுறை குரல் கொடுத்திருக்கின்றன.

2004-இல் அரசு நியமித்த நீதிபதி ஜீவன்ரெட்டி கமிசன் முதல் முன்னாள் உளவுத்துறைத் தலைவர், மத்திய உள்துறைச்செயலர் உள்ளிட்ட பலரும் இராணுவத்தின் அத்துமீறல்களைப் பாதுகாக்கும் இச்சட்டத்தை எதிர்த்திருக்கின்றனர். எனினும், இச்சட்டம் அகற்றப்படவில்லை. ''இச்சட்டத்தின் பாதுகாப்பை வல்லுறவுக் குற்றவாளிகளுக்கு வழங்கக் கூடாது; வல்லுறவுக் குற்றமிழைக்கும் இராணுவத்தினரை, மற்றெல்லா குற்றவாளிகளையும் போல நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தித் தண்டிக்க வேண்டும்'' என்று கூறுகிறது வர்மா கமிசன் அறிக்கை.

இவ்வறிக்கை வெளியான மறுநாளே, ''இராணுவத்தையெல்லாம் விசாரணைக்குட்படுத்த முடியாது'' என்று அறிவித்தார் சட்ட அமைச்சர் அசுவினி குமார். ''இராணுவத்துக்கு உடன்பாடு இல்லை என்பதால், வர்மா கமிசனின் இந்தச் சிபாரிசை அவசரச் சட்டத்தில் சேர்க்கவில்லை'' என்று வெட்கமே இல்லாமல் கூறியிருக்கிறார், ப.சிதம்பரம்.

''சட்டம் ஒழுங்கைக் காக்கும் பொறுப்பில் உள்ள இராணுவம், போலீசு உள்ளிட்டோர் மற்றும் காப்பாளர் பொறுப்பில் இருக்கும் ஆசிரியர்கள், பெண்கள் இல்லங்களின் நிர்வாகிகள் போன்றவர்கள் வல்லுறவுக் குற்றத்தில் ஈடுபடும்போது, அவர்கள் மற்றவர்களை விடக் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இத்தகையோர் இழைக்கும் குற்றங்களுக்கு, சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின் மேலதிகாரிகளும் பொறுப்பாக்கப்பட வேண்டும். வல்லுறவினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அளிக்கும் புகாரைப் பதிவு செய்யத் தவறும் போலீசு அதிகாரிக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கவேண்டும்'' என்று வர்மா அளித்துள்ள எல்லா சிபாரிசுகளையும் அரசு நிராகரித்து விட்டது. மொத்தத்தில், இராணுவம் முதல் போலீசு வரையிலான சீருடைக் கிரிமினல்களும் அதிகார வர்க்கத்தினரும் தனிவகைச் சாதியாக, மக்களை ஒடுக்கும் உரிமை பெற்றவர்களாக வழக்கம் போல நீடிப்பார்கள் என்பதையே அரசு கொண்டு வந்திருக்கும் அவசரச் சட்டம் மறுஉறுதி செய்கிறது.

கிரிமினல் அரசியல்வாதிகளையும் அவசரச் சட்டம் விட்டுக் கொடுக்கவில்லை. வல்லுறவுக் குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிகளைத் தேர்தலில் நிற்க அனுமதிக்கக் கூடாது என்ற வர்மாவின் சிபாரிசும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. நாட்டிலுள்ள சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களில் 260 பேர் வல்லுறவுக் குற்றம் சாட்டப்பட்டவர்கள். சமீபத்தில் குஜராத் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கொலை, ஆட்கடத்தல் அல்லது வல்லுறவுக் குற்றம் சாட்டப்பட்டவர்கள். அவ்வளவு ஏன், தற்

போதைய மாநிலங்களவை துணைத்தலைவரும் காங்கிரசு எம்.பி.யுமான குரியன், சூரியநெல்லி வல்லுறவு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர். இவ்வழக்கு முழுவதையுமே மறுவிசாரணை செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதும், பாதிக்கப்பட்ட பெண்ணே குரியனுக்கு எதிராகப் புகார் கொடுத்துள்ள போதும், குரியனை மாநிலங்களவைத் துணைத் தலைவர் பதவியிலிருந்து அகற்றுவதற்குக்கூட காங்கிரசு கட்சி மறுத்துவிட்டது. இலஞ்ச-ஊழல் குற்றவாளிகளைப் போலவே வல்லுறவுக் குற்றவாளிகளும் எல்லாக் கட்சிகளிலும் நிறைந்திருப்பதனால், தங்கள் இனத்தைத் தப்புவித்துக் கொள்ளும் பொருட்டு, இந்தப் பரிந்துரையையும் நிராகரித்து விட்டது அரசு.



மாவோயிஸ்டு என்ற பெயரில் கைது செய்யப்பட்டு, சத்தீஸ்கர் போலீசாரால் பாலியல் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட சோனி சோரி.

''வல்லுறவு என்பது ஒரு பெண்ணின் மீது ஆண் நிகழ்த்தும் கொடிய வன்முறை. எனவே வல்லுறவு (Rape) என்பதைக் கற்பு அழித்தல் அல்லது மானபங்கம் செய்தல் (outraging the modesty) எனக் கூறக்கூடாது'' என்கிறது வர்மா கமிசன். இந்தப் பரிந்துரையையும் அரசின் அவசரச் சட்டம் நிராகரித்துவிட்டது.

தன் மீது நிகழ்த்தப்பட்டது வல்லுறவு (கற்பழிப்பு) என்று ஒரு பெண் கூறவேண்டுமானால், தான் ஏற்கெனவே கற்புள்ளவள் என்று நிரூபிக்க வேண்டியிருக்கும் என்ற நிலைமையை இந்த அவசரச் சட்டம் வழிமொழிகிறது. இதன் மூலம் ஒரு பெண், தன் உடல் மீது கொண்டிருக்கும் தன்னாட்சி உரிமையும், அவளுடைய கண்ணியமும் நிராகரிக்கப்படுகிறது. கற்பு, கன்னித்தன்மை போன்ற நிலப்பிரபுத்துவக் கருத்துக்கள் பெண்ணின் மீது மட்டும் திணிக்கப்படுவதனால், சட்டப்படியே ஆணும் பெண்ணும் சமம் அல்ல என்றாகிறது.

1974-இல் மதுரா என்ற 16 வயது பழங்குடிப் பெண்ணை வல்லுறவுக்கு ஆளாக்கிய இரு போலீசார் விடுவிக்கப்பட்டது முதல் சமீபத்தில் சூரியநெல்லி வழக்கில் ஒரு 17 வயதுப் பெண்ணைக் குதறிய 34 குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டது வரையில் பல வழக்குகளில், பாதிக்கப்பட்ட பெண்ணை நடத்தை கெட்டவளாகச் சித்தரித்தோ, அல்லது அந்தப் பெண் தான் எதிர்த்துப் போராடியதை நிரூபிக்க முடியாவிட்டால் , அதனை பெண்ணின் சம்மதத்துடன் நடந்த உடலுறவாகவோ காட்டியோதான் குற்றவாளிகள் தப்பியிருக்கின்றனர்.

''பெண்ணின் தெளிவான சம்மதம் இல்லாமல் அவள் மீது ஏவப்படும் பாலியல் உறவு முயற்சி அனைத்தும் வல்லுறவுக் குற்றமே'' என்றும், ''மனைவியின் சம்மதமில்லாமல் கணவன் அவள் மீது பாலுறவைத் திணிப்பதும் வல்லுறவுக் குற்றமே'' என்றும் வர்மா கமிசன் கூறுகிறது.

மத்திய அரசின் அவசரச் சட்டம் இதையும் நிராகரித்து, ''திருமணம் என்பதே உடலுறவுக்கான சம்மதத்தைக் குறிப்பதுதான்'' என்று சொல்லி, வல்லுறவுக்கான உரிமத்தை கணவனுக்கு வழங்குகிறது. திருமணம் என்ற ஏற்பாட்டை, சுதந்திரமான சம உரிமை கொண்ட இரு நபர்களுக்கு இடையிலான உறவாக அல்லாமல், ஆணின் உடைமையாகவும், போகப்பொருளாகவும் மாறுவதற்கு பெண் சம்மதிப்பது என்ற பொருளிலேயே மண உறவினை விளக்குகிறது இந்த அவசரச் சட்டம்.

தொழிலாளி வேலைநிறுத்த உரிமை கேட்டாலே, ''கம்பெனியை மூடநேரிடும்'' என்று அச்சுறுத்தும் முதலாளியைப் போல, ''கணவனை வல்லுறவுக் குற்றம் சாட்டி சிறைக்கு அனுப்பிவிட்டால், மண உறவு அறுந்துவிடும்'' என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள் ஆணாதிக்கவாதிகள். ''மண உறவைப் பாதுகாக்க விரும்பும் ஆண் வல்லுறவில் ஈடுபடலாமா?'' என்ற எளிய கேள்வி கூட அவர்கள் மண்டையில் எழுவதில்லை. தற்போதுள்ள சட்டங்களின்படி, ''மனைவியைக் கணவன் அடிப்பது குற்றம்; ஆனால் வல்லுறவு கொள்வது அவன் உரிமை''.

இவையனைத்தையும் தொகுத்துப் பார்ப்போமானால், 'குலமாதர்கள்' எனப்படுவோர், ஆணுடைய விருப்பத்துக்கு இணங்கி நடக்கும் கற்புநெறி பிறழாதவர்கள் என்ற காரணத்தினால், உடலுறவுக்கு அவளுடைய சம்மதத்தை ஒரு ஆண் (கணவன்) பெறத் தேவையில்லை. எனவே, ஒரு மனைவி எனப்படுபவள், கணவன் தன்னை வல்லுறவு கொண்டதாகக் குற்றம் சாட்டவே முடியாது.

'விலை மாதர்கள்' எனப்படுவோர், 'இயல்பிலேயே' நடத்தை கெட்டவர்களாக இருப்பதால், அவர்களுடைய சம்மதத்தையும் ஒரு ஆண் பெறவேண்டியதில்லை. தனது சம்மதமின்மையையும் எதிர்ப்பையும் நிரூபிக்க முடிந்தால் மட்டுமே, ஒரு ஆண் மீது அவள் குற்றம் சாட்டமுடியும். ஆகவே, மனைவியும் விலைமாதுவும் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட முடியாதவர்கள் என்று ஆகிறது.

ஆசிட் வீசிய குற்றவாளியைத் தண்டிக்க வேண்டுமானால், தான் ஆசிட் வீச்சை எதிர்த்துப் போராடியதாக ஒரு பெண் நிரூபிக்க வேண்டியதில்லை. ஆனால், வல்லுறவுக் குற்றவாளியை தண்டிக்க வேண்டுமானால், தான் வல்லுறவை எதிர்த்துப் போராடியதை அவள் நிரூ

பிக்க வேண்டும் - இதுதான் தற்போதைய சட்டம் கூறும் நிலை.

> சூரியநெல்லி வழக்கில், ஒரு 17 வயதுப் பெண்ணை 40-க்கும் மேற்பட்ட கயவர்கள் மாறிமாறிக் குதறி, அவளுடைய பெண்ணுறுப்பே சிதைந்துவிட்டதாக மருத்துவர்கள் சான்றளித்த பின்னரும், ''அவள் எதிர்த்துப் போராடியதை நிரூபிக்கவில்லை என்பதால், அது சம்மதத்துடன் நிகழ்ந்த உடலுறவுதான்'' என்று கூறி, குற்றம் சாட்டப்பட்ட 35 பேரில் 34 பேரை விடுவித்தது கேரள உயர் நீதிமன்றம்.

''திருடனை எதிர்த்து நீங்கள் போராடியதை நிரூபித்தால் மட்டும்தான், திருட்டு நடந்திருப்பதாக ஒப்புக்கொள்ள முடியும். இல்லையேல், நீங்கள் மனம் விரும்பி உங்கள் பொருளை அவருக்கு வழங்கியதாகவே கருத முடியும்'' என்று திருட்டுக்குச் சட்டவிளக்கம் கூறினால், அது அயோக்கியத்தனம் என்று நிராகரிக்கப்படும். ஆனால், சூரியநெல்லி வழக்கில், ஒரு 17 வயதுப் பெண்ணை 40-க்கும் மேற்பட்ட கயவர்கள் மாறிமாறிக் குதறி, அவளுடைய பெண்ணுறுப்பே சிதைந்துவிட்டதாக மருத்துவர்கள் சான்றளித்த பின்னரும், ''அவள் எதிர்த்துப் போராடியதை நிரூபிக்கவில்லை என்பதால், அது சம்மதத்துடன் நிகழ்ந்த உடலுறவுதான்'' என்று கூறி, குற்றம் சாட்டப்பட்ட 35 பேரில் 34 பேரை விடுவித்தது கேரள உயர் நீதிமன்றம்.


வல்லுறவுக்கெதிரான நடவடிக்கைகளை கடுமையாக்கப் போவதாக்க் கூறிக்கொண்டு கொண்டு வரப்பட்டிருக்கும் தற்போதைய அவசரச் சட்டம், வல்லுறவைப் பெண்ணின் கற்பின் மீதான தாக்குதலாக சித்தரிப்பதன் மூலம் வல்லுறவுக் குற்றவாளிகளுக்குக் கூடுதல் பாதுகாப்பையே வழங்கியிருக்கிறது.

இவை மட்டுமின்றி, ''காப்'' பஞ்சாயத்துகள் எனப்படும் சாதிய கட்டப் பஞ்சாயத்துகள், சாதி மறுப்பு - காதல் திருமணங்களில் தலையிடுவதற்கு எதிராகவும், கவுரவக் கொலைகள் எனப்படும் சாதிவெறிக் கொலைகளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற வர்மா கமிசனின் பரிந்துரையையும் இந்த அவசரச் சட்டம் புறக்கணித்துவிட்டது.

''வல்லுறவு (rape) என்ற குற்றத்தை இழைப்பவன் ஒரு ஆணாக மட்டுமே இருக்க முடியும். அதற்குப் பலியாவது ஒரு பெண்ணாகவோ, சிறுவனாகவோ, திருநங்கையாகவோ இருக்கலாம்'' என்று கூறும் வர்மா கமிசன், இன்னொருவரின் ஒப்புதலின்றி ஒரு ஆணினால் திணிக்கப்படும் எந்த வடிவத்திலான உறவு முயற்சியும் (Any form of non consensual penetration) வல்லுறவுதான் (rape) என்று கூறுகிறது.

ஆனால் மத்திய அரசின் அவசர சட்டமோ, வல்லுறவு என்ற சொல்லையே நீக்கிவிட்டு, அதனைப் 'பாலியல் தாக்குதல்' என்று குறிப்பிடுகிறது. இதன் மூலம் வல்லுறவுக் குற்றம் என்பது ஒரு ஆண் மட்டுமே இழைக்கக் கூடிய ஆணாதிக்க குற்றம் என்ற உண்மையை மறுத்து, ஆண்களுக்கு எதிராகப் பெண்களும் வல்லுறவுக் குற்றம் இழைத்து வருவது போன்ற சித்திரத்தை உருவாக்குகிறது. இச்சட்டத்தின் மிகவும் நயவஞ்சகமான இதயம் இதுதான். இவ்வகையில் இந்த அவசரச் சட்டம் முன்னிலும் பாதகமான நிலைமைக்கே பெண்களைத் தள்ளியிருக்கிறது.

சூரியநெல்லி பாலியல் வல்லுறவு வழக்கில் தொடர்புடைய காங்கிரசு எம்.பி. குரியனை மாநிலங்களவை துணைத்தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கோரி திருவனந்தபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம். (உள்படம்) வல்லுறவுக் குற்றவாளி பி.ஜே.குரியன்.



வர்மா கமிசன் சிபாரிசுகளை ஒட்டி, அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் அவசரச் சட்டத்தில் எஞ்சியிருப்பவை - வல்லுறவுக் குற்றத்தை இரண்டாவது முறை செய்பவனுக்கு மரண தண்டனை. பெண்களைப் பின்தொடர்வது, தீண்டுவது என்பன போன்ற நடவடிக்கைகளைத் தண்டிக்கும் புதிய குற்றப்பிரிவுகள் போன்ற பம்மாத்து வேலைகள் மட்டுமே. பெண்கள் மீதான வன்கொடுமைகள் தீவிரப்படுவதற்குக் காரணமான தனியார்மய-தாராளமயக் கொள்கையையும், விழுமியங்கள்

> மத்திய அரசின் அவசரச் சட்டம், ''திருமணம் என்பதே உடலுறவுக்கான சம்மதத்தைக் குறிப்பதுதான்'' என்று சொல்லி, வல்லுறவுக்கான உரிமத்தை கணவனுக்கு வழங்குகிறது. தற்போதுள்ள சட்டங்களின்படி, ''மனைவியைக் கணவன் அடிப்பது குற்றம்; ஆனால் வல்லுறவு கொள்வது அவன் உரிமை''.

ஏதுமற்ற நுகர்வியத்தையும் முன்னேற்றம் என்ற பெயரில் பரப்பிக் கொண்டே, சில சட்டங்களின் மூலம் பெண்களைப் பாதுகாத்துவிடலாம் என்று கருதுவது மாயை என்பதை, அதிகரித்துவரும் பாலியல் குற்றங்கள் மெய்ப்பித்து வருகின்றன.

புதிய சட்டத்திருத்தங்களைப் பயன்படுத்தி பெண்களைப் பாதுகாக்கும் பொறுப்பு, பெண்களுக்கு எதிராகக் குற்றமிழைப்பதில் முன்னிலை வகிக்கும் போலீசிடமும்; ஆணாதிக்க, சாதி ஆதிக்கத் தடித்தனத்தில் ஊறிப்போன நீதித்துறையிடமும்தான் தரப்பட்டிருக்கிறது.

வல்லுறவுத் தாக்குதலுக்கு ஆளான ஒரு பெண்ணை நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு முன்னால், மனமொடிந்து குறுகிப் போயிருக்கும் அத்தகைய பெண்களுக்கு ஆறுதல் கூறி, உளவியல் சிகிச்சை அளித்து அதன் பின்னர் விசாரணை செய்யும்போதுதான் அப்பெண்ணால் பேசவே இயலும். ஆனால், பாதிக்கப்படும் பெண்களின் மீது அத்தகைய அனுதாபத்தை போலீசோ நீதித்துறையோ காட்டியதே கிடையாது என்பதே நாம் அனுபவத்தில் கண்ட உண்மை. எத்தகைய நுட்பமான இதயமுள்ள சட்டத்தை உருவாக்கினாலும், அவை இந்த இதயமற்ற நிறுவனங்களில் கையில்தான் ஒப்படைக்கப்படும். இந்த நிறுவனங்களைத் தீண்டுகின்ற வகையில் வர்மா கமிசன் பரிந்துரைத்த சட்டத்திருத்தங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுவிட்டன. எஞ்சியிருப்பது இந்த அவசரச் சட்டத்தின் மூலம் போலீசு பெறவிருக்கும் அதிகாரம் மட்டும்தான்.

சட்டங்களின் மூலமும், சட்டத்திருத்தங்களின் மூலமும் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒருக்காலும் தடுக்கவியலாது என்ற உண்மையை வர்மா கமிசனின் உறுப்பினர்களான முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி வர்மா, முன்னாள் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி லீலா சேத், முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்பிரமணியம் ஆகியோர் அதிர்ச்சியூட்டத்தக்க தமது சொந்த அனுபவத்திலிருந்தே நிரூபிக்கிறார்கள்.

வர்மா கமிசனின் அறிக்கையுடன் கொடுக்கப்பட்ட இணைப்புகளில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான வீடற்ற சிறார்கள் சிலரின் வாக்குமூலத்தையும் அவர்கள் இணைத்திருக்கிறார்கள்.

டில்லி போலீசின் இரவுக் காவல் படை போலீசார், ஒரு கோயிலுக்கு அருகாமையில் நின்றிருந்த இளம் பெண்ணைக் கதறக் கதறத் தூக்கிச் சென்றதாகவும், மரங்களடர்ந்த ஒரு பகுதியில் வைத்து அந்தப் பெண்ணை கும்பல் வல்லுறவுக்கு ஆளாக்கி வீசிவிட்டுச் சென்றதைத் தம் கண்ணால் கண்டதாகவும் அந்தச் சிறார்கள் வாக்குமூலம் அளித்திருந்தனர். ''வெளியில் சொன்னால் போலீசார் தங்களைக் கொன்றுவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக, இதனை யாரிடமும் சொல்லவில்லை'' என்றும் அவர்கள் தம் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தனர்.

வர்மா அறிக்கையுடன் இணைக்கப்பட்டிருந்த இந்த வாக்குமூலத்தைப் படித்த ''இந்து'' நாளேட்டின் நிருபர், உடனே கோபால் சுப்பிரமணியத்தை தொடர்பு கொண்டு ''இந்தப் போலீசார் குறித்துப் புகார் செய்தீர்களா, அது உங்கள் கடமையல்லவா?'' என்று அவரிடம் கேட்டிருக்கிறார்.

இதற்கு கோபால் சுப்பிரமணியம் அளித்த பதில் மிகவும் முக்கியமானது. ''அந்தச் சிறார்கள் அளித்த வாக்குமூலம் அனைத்தும் கலப்படமற்ற உண்மை. டெல்லி போலீசின் கொடூர முகம் முதல் சிறுவர் இல்லங்களில் நடக்கும் முறைகேடுகள் வரை பலவற்றைப் பற்றியும் அவர்கள் கூறினார்கள். கமிசன் உறுப்பினர்கள் மூவருமே இதுபற்றி விவாதித்தோம். இந்தக் குழந்தைகள் ஏற்கெனவே பலவிதமான வன்முறைகளை அனுபவித்திருக்கிறார்கள். இவர்களுடைய வாக்குமூலத்தின் அடிப்படையில் நாங்கள் புகாரைப் பதிவு செய்து போலீசின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரினால், இந்தக் குழந்தைகளை போலீசு பழிவாங்கிவிடும் என்று நாங்கள் அஞ்சினோம். அவர்களுடைய வாழ்க்கையை மேலும் துன்பமானதாக ஆக்க நாங்கள் விரும்பவில்லை. இந்த அமைப்பிடமிருந்து அந்தச் சிறார்களைப் பாதுகாக்க நாங்கள் விரும்பினோம். எனவேதான் புகார் கொடுக்க வேண்டாம் என்று ஒருமனதாக முடிவு செய்தோம்''

''எங்கள் அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. அறிக்கையில் கண்டுள்ள போலீசின் கும்பல் வல்லுறவைப் பற்றியோ, வேறு பல குற்றங்களைப் பற்றியோ இதுவரை போலீசுத் துறை கண்டுகொள்ளவில்லை. உள்துறை அமைச்சகமும் கண்டுகொள்ளவில்லை'' என்று பேட்டியளித்திருக்கிறார் வர்மா கமிசன் உறுப்பினர் கோபால் சுப்பிரமணியம். (தி இந்து, பிப். 20, 2013)

வன்கொடுமைகளிலிருந்து பெண்களைக் காப்பாற்றும் பொருட்டு 631 பக்கங்களில் தங்களது பரிந்துரைகளை வழங்கியிருக்கும் வர்மா கமிசன் உறுப்பினர்கள், அந்த 631 பக்கங்களும் பயனற்றவை என்ற உண்மையை தமது சொந்த அனுபவத்திலிருந்து, ஒரே வரியில் கூறிவிட்டார்கள்.

• சூரியன்

# எது கொடியது?

## சி.ஐ.ஏ. நடத்தும் சித்திரவதையா?

## என்.ஜி.ஓ.க்கள் பேசும் மனித உரிமையா?

''பயங்கரவாதத்தின் மீதான போர்'' என்ற பெயரில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ., உலகெங்கும் இரகசியமாக ஆட்கடத்தல்- சித்திரவதைகளை நடத்தியிருப்பதை, நியூயார்க்கைச் சேர்ந்த ''ஓப்பன் சொசைட்டி பவுண்டேசன்'' என்ற ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனத்தின் புலனாய்வு அறிக்கை அம்பலப்படுத்தியிருக்கிறது. மன்மோகன் சிங்கின் மகள் அம்ரித் சிங் வெளியிட்டுள்ள ''சித்திரவதையின் உலகமயமாக்கம்'' என்ற இந்த அறிக்கை, உலகின் 54 அரசுகள், தமது நாட்டு சட்டங்களுக்கே விரோதமாக, தம் நாட்டுக் குடிமக்களையே கைது செய்து சி.ஐ.ஏ.விடம் ஒப்படைத்ததோடு, அவர்களைச் சித்திரவதை செய்யவும் கடத்தவும் உடந்தையாக இருந்ததை அம்பலப்படுத்தியிருக்கிறது. இப்படி சி.ஐ.ஏ. வுக்கு ஒத்துழைத்த நாடுகளின் பட்டியலில் 'ஜனநாயகம் தழைத்தோங்கும்' ஜெர்மனி, பிரிட்டன், டென்மார்க், கனடா போன்ற நாடுகள் முதல் அமெரிக்காவால் ''தீய சக்திகளின் ஆணிவேர்'' என சித்தரிக்கப்படும் சிரியா, இரான் போன்ற இஸ்லாமிய நாடுகள் வரை பலரும் அடக்கம்.

அதிர்ச்சியூட்டும் செய்தி இது மட்டுமல்ல; சி.ஐ.ஏ.வை அம்பலமாக்கும் இந்த அறிக்கையை வெளியிட்டிருப்பவர், அமெரிக்காவில் வசிக்கும் மன்மோகன் சிங்கின் மகள் அம்ரித் சிங். புருவத்தை உயர்த்த வேண்டாம். அது பற்றி ஆராய்வதற்கு முன், அம்ரித் சிங்கின் அறிக்கை கூறும் விவரங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

இன்று அமெரிக்க மனித உரிமைத் தீர்மானத்தை எதிர்கொண்டிருக்கும் இலங்கை அரசு, சி.ஐ.ஏ.வின் ஆட்கடத்தலுக்கு உதவியுள்ளது. 2003-இல் சி.ஐ.ஏ.வின் ஆட்கடத்தலுக்காக உபயோகப்படுத்தப்படும் ரிச்மோர் ஏவியேஷன் நிறுவனத்தின் விமானம், பாங்காக்கிலிருந்து ரித்

அமெரிக்கா பல்வேறு நாடுகளின் ஒத்துழைப்போடு நடத்திவரும் இரகசிய சிறை - சித்திரவதைகளின் வகைமாதிரி.



வான் இசாமுதீனைக் கடத்துவதற்கு முன் இலங்கையில் தரையிறங்கியிருக்கிறது. இவர் பின்னர் மூன்றாண்டுகள் சி.ஐ.ஏ.வின் பல்வேறு இரகசிய முகாம்களில் சித்திர வதை செய்யப்பட்டு, 2006-இல் குவாண்டினாமோ பே சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

2004-ஆம் ஆண்டு பாத்திமா பவுச்சர் என்ற சிரிய நாட்டுப் பெண் கோலாலம்பூர் விமான நிலையத்தில் பிடிக்கப்பட்டு விமான நிலையத்திலேயே உருவாக்கப் பட்ட இரகசிய அறையில் அமெரிக்க உளவுத்துறை யினால் பல நாட்கள் சித்திரவதை செய்யப்பட்டார். நான் கரை மாத கர்ப்பமாக இருந்த பவுச்சர், சங்கிலியால் கட்டப்பட்டு, ஐந்து நாட்களுக்குப் பட்டினி போட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்.

ஈரானில் பிடிக்கப்பட்ட அகமது அல்-தீமா, ஆப் கானிஸ்தானில் அமெரிக்க உளவுத்துறையின் இருண்ட சிறையில் 77 நாட்கள்அடைக்கப்பட்டிருந்தார். அதன் பிறகு பாக்ரம் என்றஇடத்துக்கு கடத்தப்பட்டு கூரையில் கட்டித் தொங்கவிடுவது, நாய்களால்அச்சுறுத்துவது, சித் திரவதை வீடியோக்களை பார்க்க வைப்பது, எந்திரத்தால் அறுக்கும் சத்தத்தோடு வலியால் அலறும் சத்தத்தைக் கேட்க வைப்பது என்று 40 நாட்களுக்குச் சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார்.

- இவை சில எடுத்துக்காட்டுகள். இது போல பல விதமாக அமெரிக்கா நடத்திவரும் மனிதத்தன்மையற்ற, மிருகத்தனமான சித்திரவதைகளுக்கு 54 நாடுகள் முழு ஒத்துழைப்பு கொடுத்துள்ளன.

சி.ஐ.ஏ. செய்த இத்தகைய கொடூரங்கள் வெளியா வது இது முதல்முறையல்ல. சி.ஐ.ஏ.வின் ‘‘கருந்தளங் கள்’’ என அறியப்பட்ட இரகசிய சித்திரவதைக் கூடங் களைப் பற்றியும் அதற்கு ஐரோப்பிய நாடுகள் வழங்கும் ஒத்துழைப்பு பற்றியும் 2005-இல் சில அமெரிக்கப் பத் திரிகைகள் செய்திகளை வெளியிட்டன. அப்போது ஐரோப்பிய சபை நடத்திய விசாரணையில் ஏறத்தாழ இரு பது நாடுகள் சி.ஐ.ஏ.வுக்குத் துணைபுரிந்தது அம்பலமா கியது. 2006 ஜனவரியில் ஐரோப்பிய நாடாளுமன்றம் அமைத்த மற்றொரு விசாரணைக் குழு அளித்த அறிக்கை, 2001-2005 காலகட்டத்தில் ஐரோப்பிய விமான வழித்தடத்தின் ஊடாக மட்டுமே சி.ஐ.ஏ. 1245 தடவை விமானங்கள் வழி ஆட்கடத்தலில் ஈடுபட்டதை அம்பலப்படுத்தியது. 2012-ஆம் ஆண்டு மனித உரிமை கண்காணிப்பகம் என்ற தொண்டு நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், சி.ஐ.ஏ. ஆப்கான் ஆக்ரமிப்பின் போது ‘‘வாட்டர் போர்டிங்’’ என்றகொடூர தண்ணீர் சித்திர வதையை கைதிகள் மீது ஏவியதாகக் குற்றம் சாட்டியது. ஆனால், இந்தச் சித்திரவதைகள் உயரதிகாரிகளின் வழி காட்டுதல்படி, ‘‘அமெரிக்க நலனுக்காகவே நடந்தது’’ என்பதால், அதன் மேல் நடவடிக்கை எடுக்க முடியாது என்றார் அமெரிக்க அட்டர்னி ஜெனரல் எரிக் ஹோல்டர்.

தற்போது இவ்வறிக்கையை வெளியிட்டிருக்கும் அம்ரித் சிங், ‘‘சி.ஐ.ஏ. வின் இத்தகைய நடவடிக்கைகள் மீது அமெரிக்க அரசு ஒரு சுயேச்சையான விசாரணை நடத்தி, இந்தச் சித்திரவதை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சி.ஐ.ஏ. அதிகாரிகள் யார் என்பதை அம் பலமாக்க வேண்டும்; நடந்துள்ள இந்த முறைகேடு களுக்கு அமெரிக்கா மட்டுமின்றி, மற்ற நாடுகளும் பொறுப்புதான் என்ற போதிலும், இவ்வாறு சர்வதேச சட்டங்களை மீறி நடந்து கொள்வதன் விளைவாக, உல களவில் பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா மேற் கொண்டுவரும் முயற்சிகளுக்கு ஆதரவு குறைவதுடன், அமெரிக்காவின் தார்மீகத் தகுதியும் பாதிக்கப்பட்டு விடும்’’ என்று குறிப்பிடுகிறார்.

அம்ரித் சிங்கின் அறிக்கை, ‘‘அமெரிக்க அரசு வேறு; அதன் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. வேறு’’ போலவும், சி.ஐ.ஏ. என்பது நாட்டாமைக்கு தெரியாமல் ரவுடித்தனம் செய்யும் தறுதலைப் பிள்ளை போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறது. சி.ஐ.ஏ. வுக்கு கிரிமினல் வேலைகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரமும் சுயேச்சைத் தன்மையும் அமெரிக்க அரசால் திட்டமிட்டேதான் வழங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு நாடு களில் ‘‘டேர்டி வொர்க்ஸ்’’ என்று வகைப்படுத்தப் பட்டுள்ள ஆட்கடத்தல், சித்திரவதை, கொலை போன்ற இரகசிய வேலைகளில் தொடங்கி, இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகள் வரையில் எல்லா நடவடிக்கைகளிலும் அது ஈடுபட்டிருப்பது மட்டு மின்றி, அமெரிக்க ஏகாதிபத்தியத் தொழில் நிறு வனங்களுக்காக, மற்ற நாடுகளின் வணிக நட வடிக்கைகள், ஒப்பந்தங்களை வேவு பார்ப்பது வரையிலான முறைகேடுகளிலும் அது ஈடுபட் டிருக்கிறது.

இவையெல்லாம் அம்ரித் சிங் அறியாதவை யல்ல. சர்வதேச சட்டங்களை மீறி அப்பட்டமான ஆக்கிரமிப்புகளை அதிகாரபூர்வமாகவே அமெரிக்க அரசு அரங்கேற்றி வரும் சூழலில், சி.ஐ.ஏ. இரகசியமாக செய்த சட்டவிரோத சித்திர வதைகளைத் தேடிக் கண்டுபிடித்து, ‘அமெரிக்கா வின் தார்மீகத் தகுதியைக் காப்பாற்றுவதற்காக’

அமெரிக்க இராணுவத்தால் குவாண்டினாமோ பே சிறைச்சாலைக்குக் கடத்திச் செல்லப்படும் பரிதாபத்திற்குரிய ஒரு கைதி.



விசாரணை கோருகிறார் அம்ரித் சிங். ஏனென்றால், அவர் ''ஓபன் சொசைட்டி பவுண்டேசன்'' என்ற ஏகாதிபத்திய தொண்டு நிறுவனத்தின் ''தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புத் திட்டத்திற்கு'' பொறுப்பு வகிக்கும் தலைமை சட்ட அதிகாரி.

ஓபன் சொசைட்டி பவுண்டேசன் என்பது உலகப் பெரும் கோடீசுவரனும், நிதி மூலதனச் சூதாடியுமான ஜார்ஜ் சோரோஸ் என்பவனால் நடத்தப்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனம். 1980-களில் போலந்தில் போலி கம்யூனிச ஆட்சிக்கு எதிரான மக்கள் கோபத்தை சாலிடாரிட்டி என்ற எதிர்ப்புரட்சி இயக்கத்துக்கு ஆதரவாகத் திருப்புவதில் சோரோஸின் இந்த அமைப்பு முக்கியப் பாத்திரம் ஆற்றியது. மாசிடோனியா, பெலாரஸ், குரோசியா எனப் பல கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளில் முதலாளித்துவத்தை நிறுவியதும், ஜார்ஜியாவில் ரோஜாப் புரட்சியை பின்நின்று இயக்கியதும் சோரோஸின் தொண்டு நிறுவனங்கள்தான்.

ஜார்ஜியாவில் ஆட்சியைக் கைப்பற்றியதும் ஓபன் சொசைட்டி பவுண்டேசனின் பொறுப்பில் இருந்தவர்கள் அமைச்சர்களாயினர். அந்நாட்டின் துறைமுகம், மின்சாரம், ரயில்வே ஆகியவை சோரோஸின் கைக்கு மாறின. மிலோசோவிச்சை ஆட்சியிலிருந்து இறக்கி, யூகோஸ்லாவியாவைப் பிளந்தது மட்டுமல்ல, கொசாவோ விடுதலைப் படை என்ற இசுலாமியப் படைக்கு பணமும் ஆயுதமும் கொடுத்து, பதிலுக்கு அந்நாட்டின் தங்கம், வெள்ளி, காரீயச் சுரங்கங்களைக் கைப்பற்றிக் கொண்டார் சோரோஸ். ''முன்னாள் சோவியத் சாம்ராச்சியத்தை இனி சோரோஸ் சாம்ராச்சியம் என்று அழையுங்கள்'' என்று திமிராக அறிவிக்கும் அளவுக்கு சோரோஸின் தொண்டு நிறுவனங்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் விளையாடின.

சோரோஸின் ''இன்டர்நேசனல் கிரைசிஸ் குரூப்'' என்ற தொண்டு நிறுவனத்தில், தாலிபானையும் பின்லாடனையும் உருவாக்கிய முன்னாள் அமெரிக்க பாதுகாப்பு செயலர் பிரசென்ஸ்கி, நேட்டோ படைத் தளபதி வெஸ்லி கிளார்க், யுகோஸ்லேவியாவில் ஆட்சித் தகர்வை முன்னின்று நடத்திய அமெரிக்க முன்னாள் தூதர் வாரன் சிம்மெர்மென் போன்றவர்கள் கவுரவப் பதவி வகிக்கின்றனர். 1998-இலேயே இராக் மீதான தாக்குதலுக்கு அரசியல், இராணுவ வழிகாட்டுதல்களை கிளிண்டனுக்கு வழங்கியவர்கள் சோரோஸின் ஆலோசகர்கள்தான். ஆயுத பேரங்கள் வழி பெரும் இலாபமீட்டும் கார்லைல் என்ற நிதிச்சூதாட்ட நிறுவனத்தில் 100 பில்லியன் டாலர் முதலீடு செய்திருக்கும் சோரோஸுக்கு சீனியர் புஷ், முன்னாள் அமெரிக்க அரசுச் செயலர்கள், பின் லாடனின் உறவினர்கள் ஆகியோர் தொழில் கூட்டாளிகள்.

ஓபன் சொசைட்டி பவுண்டேசன் என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வரும் அமெரிக்கப் பெருமுதலாளி ஜார்ஜ் சோரஸ்.





''சித்திரவதையின் உலகமயமாக்கம்'' அறிக்கையைத் தொகுத்து வெளியிட்ட அம்ரித் சிங்.

சோரோஸ் கடைப்பிடிக்கும் உத்தி எளிமையானது. எந்த நாடுகளில் சர்வாதிகாரத்துக்கு எதிரான மக்கள் அதிருப்தி நிலவுகிறதோ, அங்கே சோரோஸின் மனித உரிமை மீட்பர்கள் களமிறங்குவார்கள். அதன் பின்னர் அந்த நாடுகள் பற்றிப் பத்திரிகைகள் வெளியிடும் தலைப்புச் செய்திகளை சோரோஸின் பணம் தீர்மானிக்கும். அரசுக்கு எதிரான மக்கள் கோபத்தை சோரோஸின் அரசியல் மற்றும் அறிவுத்துறை கூலிப்படை தன்வயப்படுத்திய பின்னர், பொருத்தமான நேரத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை கண் சிமிட்டும். அந்த நாட்டில் 'புரட்சி' அல்லது 'ஆட்சிக்கவிழ்ப்பு' அரங்கேறும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விரிவாக்க நடவடிக்கைகளும், சோரோஸின் தொழில் சாம்ராச்சியமும், அவரது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இணக்கமான முறையில் பிணைந்திருக்கின்றன.

இதன் பொருள் பிணக்கே இல்லை என்பதல்ல. முதலாளித்துவத்தையும் அமெரிக்க மேலாதிக்கத்தையும் நாசூக்காக, நயவஞ்சகமாக மக்கள் ஆதரவோடு நிலைநாட்ட வேண்டும் என்பது சோரோஸின் அணுகுமுறை. இதை விடுத்து மூர்க்கத்தனமான முறையில் இராக் மீது படையெடுத்த காரணத்தினால் ஜூனியர் புஷ்ஷை வெளிப்படையாக எதிர்த்து பரபரப்பைக் கிளப்பினார் சோரோஸ். அப்போதே சோரோஸின் உண்மை முகத்தை 'நியூ ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகையில் நீல்கிளார்க் என்ற பத்திரிகையாளர் தோலுரித்தார்.

சோரோஸ் வெளியிட்ட ஆக்கிரமிப்பு எதிர்ப்பு எத்தகையதோ, அத்தகையதுதான் தற்போது மன்மோகன் சிங்கின் மகள் அம்ரித் சிங் வெளியிட்டிருக்கும் சித்திரவதை எதிர்ப்பு. அப்பன் அமெரிக்க அடிவருடி என்றால், மகள் எதிர்ப்பை நிறுவனமயமாக்கிக் காயடிக்கும் தொண்டு நிறுவன நிர்வாகி. எது கொடியது? சி.ஐ.ஏ.வின் சித்திரவதையா, தொண்டு நிறுவனங்கள் பேசும் மனித உரிமையா?

● அன்பு

# காவிரி:
# சிக்கல் தீரவில்லை!

**காவிரி இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டிருப்பதை, ஜெயா தனது சுயதம்பட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதை அனுமதிக்கக் கூடாது.**

தமிழக மக்களின் தொடர்ச்சியான போராட்டங்கள், ஆட்சியாளர்களின் துரோகங்கள், வறட்சி, விவசாயிகளின் தற்கொலைகள் - இவற்றுக்குப் பின்னர் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை இந்திய அரசு கடந்த பிப்ரவரியில் அரசிதழில் வெளியிட்டுள்ளது.

ஆறாண்டுகளுக்கு முன்பு 2007-இல் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளியானபோது, ''இத்தீர்ப்பு தமிழகத்துக்குப் பாதகமானது, மைனாரிட்டி தி.மு.க. துரோக அரசு பதவி விலக வேண்டும்'' என்று கூப்பாடு போட்டார் பாசிச ஜெயலலிதா. அப்படிக் கூறியவர்தான் இப்போது, ''எனது 30 ஆண்டுகால அரசியல் வாழ்வில் கிடைத்த மகத்தான வெற்றி, இது எனக்குக் கிடைத்த பிறந்தநாள் பரிசு, இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியாவதற்கு நானே காரணம்'' என்று தனக்குத் தானே பெருமை கொண்டாடுகிறார்.

காவிரியில் நீரின்றி சம்பா பயிர்கள் கருகி, அடுத்தடுத்து விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட போதிலும், தமிழகத்தில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளே கிடையாது என்று திமிராக அறிவித்ததோடு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்கூட தராமல் அலட்சியப்படுத்தியது ஜெயா அரசு. விவசாயிகளின் போராட்டங்களுக்குப் பின்னரே, 50 சதவீதத்துக்கு மேல் பயிர் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு மட்டும், ஒரு ஏக்கருக்கு ரூ.15,000 வீதம் இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. இதிலும் பயிர் காப்பீடு நிறுவனம் வழங்கும் இழப்பீட்டை அரசே எடுத்துக் கொண்டு மீதமுள்ள ரூ. 5,808தான் விவசாயிகளுக்குத் தரப்படும். தஞ்சையில் இந்த அற்ப இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சியில், ஜெயாவின் அடிமை அமைச்சர் வைத்தியலிங்கம், விவசாயிகள் கைதட்டாததைக் கண்டு ஆத்திரமடைந்து ''உங்களுக்கு அறிவு இல்லையா? நீங்கள் எல்லாம் உணர்ச்சியற்ற பிண்டங்களா?'' என்று விவசாயிகளை இழிவுபடுத்தி ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளார். இப்படி விவசாயிகளின் நலனில் மயிரளவும் அக்கறையில்லாத இந்த கும்பல்தான் பாசிச ஜெயாவை ''காவிரித் தாய்'' என்று துதிபாடிக் கொண்டு அவருக்கு ஒளிவட்டம் போட்டுக் கொண்டு திரிகிறது.

கடந்த பிப்ரவரி 2007-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இந்த நடுவர் மன்றத் தீர்ப்பு 6 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மிகத் தாமதமாக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதன் மூலம், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு நாட்டின் சட்டங்களில் ஒன்றாகியுள்ளது. இருப்பினும், அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள முடிவின்படி கர்நாடகம் இச்சட்டத்தை மதித்து செயல்படுமா என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. ''காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க அனுமதிக்க மாட்டோம்; காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அமல்படுத்தவும் விடமாட்டோம்'' என்கிறது கர்நாடக பா.ஜ.க. ''காவிரி மேலாண்மை வாரியத்தை இப்போது அமைக்க முடியாது'' என்று அடாவடியாகப் பேசுகிறார், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் ஹரீஷ் ராவத். தற்போது இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட பின்னரும், தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்துவிட முடியாது என்று கர்நாடக முதல்வர் ஷெட்டர் பகிரங்கமாகக் கொக்கரிக்கிறார்.

நிபந்தனைகளின்றி அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மறியல் போராட்டம் நடத்திய விவசாயிகளைக் கைது செய்ததைக் கண்டித்தும், அவர்களை விடுவிக்கக் கோரியும் திருவாரூர் ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தும் விவசாயிகள்.



எனவே, காவிரி நடுவர் மன்றத் இறுதி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளவாறு, தன்னாட்சி அதிகாரமுள்ள காவிரி மேலாண்மை வாரியம் அமைத்து அதன் கட்டுப்பாட்டில், கர்நாடகத்திலுள்ள நான்கு அணைகளையும் நீர்ப்பாசன நிர்வாகத்துக்கு உட்படுத்தி கண்காணித்தால்தான், இந்த இறுதித் தீர்ப்பு

நடைமுறைக்கு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இதற்கு எவ்வித காலக்கெடுவையும் நிர்ணயிக்காத உச்ச நீதிமன்றம், கடந்த பிப்ரவரி 25 அன்று காவிரி மேலாண்மை வாரியத்தை அமைப்பது மைய அரசின் கடமை என்று கூறி எவ்வித உத்தரவும் பிறப்பிக்காமல் நழுவிக் கொண்டுள்ளது. கர்நாடக முதல்வர் ஷெட்டர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு உள்ளிட்டு, தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட துணை மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்துள்ளது.


காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்கக் கோரி, திருவாரூர் மாவட்டம் அடியக்கமங்கலத்தில் உள்ள ஓ.என்.ஜி.சி. பெட்ரோலிய கிணறுகளை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தும் காவிரி மீட்புக் குழுவினர்.

இவையும் போதாதென்று, தமிழகத்தின் குறுவை சாகுபடிக்கு ஜூன் மாதத்தில் தண்ணீர் வேண்டும் என்பது கூடத் தெரியாமல், விவசாயத்தைப் பற்றிய பொதுஅறிவு கூட இல்லாமல், இறுதித் தீர்ப்பு குறித்த வழக்கின் இறுதி விசாரணையை ஆகஸ்ட் 6-ஆம் தேதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. காவிரி நீரில் தமிழகத்தின் நியாயவுரிமையை அலட்சியப்படுத்தி, தமிழக விவசாயிகளின் உயிராதமான இப்பிரச்சினையைத் தட்டிக் கழிக்கும் வகையில்தான் உச்ச நீதிமன்றம் அதிகார வர்க்கத் தோரணையில் அணுகி வருகிறது.

உச்சநீதிமன்றம் தனது பொறுப்பைத் தட்டிக்கழித்து நழுவிக் கொள்வதையும், அடாவடித்தனமான கர்நாடக அரசு மீது தனது அதிகாரத்தை ஏவி கட்டுப்படுத்த இந்திய அரசு தொடர்ந்து மறுப்பதையும் இவையனைத்தும் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன. எனவே, அரசிதழில் இறுதித் தீர்ப்பு வெளியிடப்படுள்ளதால் அதிசயம் ஏதும் நடந்துவிடப் போவதில்லை. ஏற்கெனவே 1991-இல் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டபோது, கர்நாடக அரசு அதைச் செயல்படுத்த மறுத்தது. மைய அரசோ கைகட்டி நின்றது. கன்னட இனவெறியர்களோ, தமிழர்களுக்கு எதிராக மிகக் கொடிய கலவரத்தை அரங்கேற்றினர்.

இந்நிலையில், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், வரதட்சணை தடுப்புச் சட்டம் போலவே காவிரி இறுதித் தீர்ப்பானது இன்னுமொரு காகிதச் சட்டமாகவே இருக்கும். தமிழகத்தின் நியாயவுரிமையை நிலைநாட்ட வேண்டிய உச்ச நீதிமன்றமும், கர்நாடகத்துக்கு உத்தரவிட்டு செயல்படுத்த வேண்டிய அதிகாரத்தைக் கொண்டுள்ள மைய அரசும் எந்த நடவடிக்கையுமின்றி நழுவிக் கொள்ளும் தற்போதைய அரசியலமைப்பு முறையில், இந்தச் சட்டம் ஒரு அங்குலம் கூட நகராது. ஆனாலும் கருணாநிதியும் ஜெயலலிதாவும் இந்த அநீதிக்கும், கர்நாடகத்தின் அடாவடிக்கும், மைய அரசின் செயலற்ற நிலைக்கும் எதிராக வாய்திறக்காமல், தங்களால்தான் காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதாகக் காட்டி மலிவான அரசியல் நாடகத்தை நடத்துகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஓட்டுக்குத்தான் விவசாயிகள் தேவையாக உள்ளனரே தவிர, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயமும் விவசாயிகளும் தேவையில்லை என்பதுதான் ஆளும் கும்பலின் மறுகாலனியாதிக்கக் கொள்கையாக உள்ளது. ஏற்கெனவே காவிரி கடைமடைப் பகுதிகளில் இறால் பண்ணைகளை அமைத்து விவசாயத்தை நாசமாக்கிய இக்கும்பல், இப்போது விவசாயிகள் மாற்றுப் பயிர்களுக்கும், நவீன விவசாயத்துக்கும் மாறவேண்டுமென உபதேசிக்கிறது. விவசாயத்தையும் விளைநிலங்களையும் அழித்து வீட்டு மனைகளாக மாற்றுவதையும், கிழக்குக் கடற்கரைப் பகுதி முழுவதிலும் கார்ப்பரேட் கொள்ளைக்கான மின் நிலையங்களையும் அணு மின் நிலையங்களையும் அமைப்பதையும் ஆளும் கும்பல் நோக்கமாகக் கொண்டுள்ளது. இவற்றின் நடுவே நிலத்தடி நீரையும் உறிஞ்சி டெல்டா மாவட்டங்களைப் பாலைவனமாக்கி வரும் தண்ணீர் வியாபாரிகள் பெருகி வருவதோடு, உலகவங்கி - உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி தண்ணீரை வர்த்தகப் பொருளாக்கும் வகையில் மைய அரசு தேசிய நீர்க் கொள்கையை வகுத்துக் கொண்டுள்ளது. மொத்தத்தில் விவசாயிகளை விவசாயத்திலிருந்தே விரட்டியடிப்பதும், இனி விவசாயமே செய்ய முடியாத நிலையை உருவாக்குவதுமான மறுகாலனியாதிக்கக் கொள்கைகள் வேகமாகத் திணிக்கப்பட்டு வருகின்றன.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியாகியுள்ளதைக் காட்டி, தமிழகத்துக்கு நியாயம் கிடைத்துவிட்டதைப் போன்றதொரு தோற்றத்தை ஓட்டுப் பொறுக்கி பிழைப்புவாதிகள் ஏற்படுத்திவரும் இன்றைய நிலையில், இதனை அம்பலப்படுத்தி காவிரியில் தமிழகத்தின் நியாயவுரிமைக்காகவும், தீவிரமாகி வரும் மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராகவும் தமிழக உழைக்கும் மக்கள் விடாப்பிடியான தொடர் போராட்டங்களை நடத்துவதே இன்றைய முதன்மைத் தேவையாக உள்ளது.


● கதிர்

# நோக்கியாவின் பலே திருட்டு!

**நோக்கியா பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமான வரியைக் கட்டாமல் ஏய்த்திருப்பது, தனியார்மயம் குறித்து பரப்பப்படும் மாயைகளைத் தகர்க்கிறது.**

ஐரோப்பாவிலுள்ள பின்லாந்து நாட்டைச் சேர்ந்த கைபேசி தயாரிப்பு நிறுவனமான நோக்கியா குறித்துப் புதிதாக அறிமுகப்படுத்தத் தேவையில்லை. தமிழக அரசு, பலத்த போட்டிக்கிடையே, பல சலுகைகளை அளித்து, அந்நிறுவனத்தைத் தமிழகத்திற்கு அழைத்து வந்தது. நோக்கியாவின் வருகை சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகவும், தமிழகத்தின் நவீன அடையாளமாகவும் காட்டப்பட்டது. இப்படி ஆளும் கும்பலால் ஒளிவட்டம் போட்டுக்காட்டப்பட்ட நோக்கியா, பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்துள்ள திருட்டுக் கூட்டம் என்ற உண்மை இப்பொழுது அம்பலமாகியிருக்கிறது.

சிறீபெரும்புதூரில் அமைந்துள்ள நோக்கியா ஆலையிலும், பெருங்குடியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்திலும், டெல்லியை அடுத்துள்ள குர்கானில் அமைந்துள்ள அதன் துணை நிறுவனங்களிலும் கடந்த ஜனவரி மாதத்தில் ஒரே சமயத்தில் வருமான வரிச் சோதனை நடத்திய அதிகாரிகள், நோக்கியா, பின்லாந்திலுள்ள அதன் தாய் நிறுவனத்திடமிருந்து மென்பொருளை இறக்குமதி செய்ததில் 3,000 கோடி ரூபாய் முதல் 18,000 கோடி ரூபாய் வரை வரி ஏய்ப்பு செய்திருப்பதைக் கண்டுபிடித்து உறுதி செய்துள்ளனர். பின்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மென்பொருட்களை, கச்சாப் பொருளாகக் காட்டி இந்த வரிஏய்ப்பை நோக்கியா நடத்தியிருக்கிறது.




அரசுக்குச் செலுத்த வேண்டிய பல ஆயிரம் கோடி ரூபாய் வரியைக் கட்ட நோக்கியா முன்வருமா? அல்லது நீதிமன்றத்தில் முறையிட்டு, சட்டத்தின் ஓட்டைகளுக்குள் புகுந்து, வோடாஃபோன் நிறுவனம் போல ஏய்த்த வரியைக் கட்டாமல் தப்பித்துக் கொள்ளுமா என்ற சுவாரசியமான காட்சிக்கு நாம் இன்னும் சில காலம் காத்திருக்கத்தான் வேண்டும்.

நோக்கியா நிறுவனம் தமிழகத்தின் சிறீபெரும்புதூர் ஆலையில் போட்டுள்ள மொத்த மூலதனம் 22.5 கோடி அமெரிக்க டாலர்கள். இது (இந்திய ரூபாயில்) இன்றைய மதிப்பின்படி 1,125 கோடி ரூபாய். நோக்கியா நிறுவனம் தனது ஆலையைத் தமிழகத்தில் அமைப்பதற்காக, ''அந்நிறுவனம் இந்தியாவினுள் விற்கும் அதனின் கைபேசிகள் மீது விதிக்கப்படும் மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட பிற வரிகள் அனைத்தையும் அந்நிறுவனத்திற்கே மானியமாக அளிப்பதாக'' ஒப்புக் கொண்டது, தமிழக அரசு. இதன் காரணமாக நோக்கியா சிறீபெரும்புதூர் ஆலையில் உற்பத்தியைத் தொடங்கியதிலிருந்து ஏழு ஆண்டுகளுக்கு 645.4 கோடி ரூபாயை வரிச் சலுகைகளாகவும் மானியமாகவும் தமிழக அரசிடமிருந்து பெறும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுவொருபுறமிருக்க, நோக்கியா நிறுவனம் சிறப்புப் பொருளாதார மண்டலமாகக் கருதப்படுவதால், 2005-06 மற்றும் 2006-07 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் அந்நிறுவனத்திற்கு மைய அரசு அளித்துள்ள சுங்க வரி மற்றும் உற்பத்தி வரி விலக்குச் சலுகை ஏறத்தாழ 681.38 கோடி ரூபாய். மேலும், 2006-07, 2007-08, 2008-09 ஆகிய மூன்று ஆண்டுகளில் அந்நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட வருமான வரி உள்ளிட்ட நேரடி வரிச் சலுகைகள் மற்றும் ஏற்றுமதி வரிச் சலுகைகள் ஆகியவை காரணமாக அந்நிறுவனம் அடைந்துள்ள மறைமுக இலாபம் ஏறத்தாழ 8,000 கோடி ரூபாய். இவ்வளவு வரிச் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு வரி ஏய்ப்பில் ஈடுபட்டிருக்கும் அந்நிறுவனத்தை மூடி சீல் செய்திருக்க வேண்டும்; இந்த வரி ஏய்ப்பில் ஈடுபட்ட அந்நிறுவனத்தின் தலைவர், அதிகாரிகள்



என்ற கொள்ளைக் கூட்டத்தின் மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டிருக்க வேண்டும்.

இவை எதுவுமே நடைபெறவில்லை. ஆனாலும், நோக்கியா உள்ளிட்ட கார்ப்பரேட் முதலாளிகள், தங்கள் மீது வருமான வரித்துறை அதிகாரிகள் வேட்டை நாயைப் போலப் பாய்வதாகவும், இது முதலீட்டுச் சூழலைப் பாதிக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்து வருகிறார்கள்.

நோக்கியா பல்லாயிரம் கோடி ரூபாய் வரிச் சலுகைகளையும் பெற்றுக் கொண்டு 18,000 கோடி ரூபாய் அளவிற்கு வரி ஏய்த்திருப்பது மட்டுமல்ல; ஆறே ஆண்டுகளில் அந்நிறுவனம் 25,000 கோடி ரூபாய் அளவிற்கு அதிரடி இலாபம் அடைந்திருப்பதும், அந்த இலாபம் முழுவதும் இந்தியாவிலிருந்து பின்லாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதும் கவனத்திற்குரியதாகும். நோக்கியா, ஐரோப்பிய நாடுகளில் உள்ள தனது ஆலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்குத் தரும் சராசரி ஊதியம் 29 இலட்சம் ரூபாய். இது, சென்னையில் உள்ள நோக்கியா ஆலையில் வேலை பார்க்கும் தொழிலாளிக்குத் தரப்படும் ஆண்டு ஊதியத்தைவிட 45 மடங்கு அதிகம். சட்டபூர்வமாக நடந்துவரும் இந்த உழைப்புச் சுரண்டல்தான் அந்நிறுவனத்திற்கு ஆறே ஆண்டுகளில் 25,000 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அதிரடி இலாபத்தை அள்ளித் தந்திருக்கிறது.

**நோக்கியா, ஐரோப்பிய நாடுகளில் உள்ள தனது ஆலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்குத் தரும் சராசரி ஊதியம் 29 இலட்சம் ரூபாய். இது, சென்னையில் உள்ள நோக்கியா ஆலையில் வேலை பார்க்கும் தொழிலாளிக்குத் தரப்படும் ஆண்டு ஊதியத்தை விட 45மடங்கு அதிகம்.**

இந்தியாவைக் கொள்ளையடித்துத்தான் இங்கிலாந்து வளமான நாடாக மாறியது என்பது காலனியக் காலக்கட்டத்தில் நிரூபணமான உண்மை. அன்றிருந்தது கிழக்கிந்திய கம்பெனி என்ற ஒரு நிறுவனம்தான். இன்றோ பல நூறு பன்னாட்டு நிறுவனங்கள், தனியார்மயம்-தாராளமயம் என்ற பெயரில் நாட்டைச் சட்டபூர்வமாகவும் சட்டவிரோதமாகவும் கொள்ளையடித்து வருகின்றன.

2005-06 நிதியாண்டில் மட்டும் 1,915 பன்னாட்டு நிறுவனங்களுள் 411 நிறுவனங்கள் வரி ஏய்ப்பில் ஈடுபட்ட உண்மையை நாடாளுமன்றத்திலேயே போட்டு உடைத்தார், நிதித்துறை துணை அமைச்சர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம். வோடாஃபோன் நிறுவனம் 11,000 கோடி ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்த தகிடுதத்தம் கடந்த ஆண்டு அம்பலமாகியது. இவையன்றி, பெட்ரோலிய நிறுவனமான ஷெல், இணைய தள நிறுவமான கூகுள் ஆகியவையும் வரி ஏய்ப்பில் ஈடுபட்டிருப்பது சமீபத்தில் அம்பலமாகியிருக்கும் உண்மைகள். கடந்த நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக 95,000 கோடி ரூபாய் இந்தியாவிலிருந்து அந்நிய நாடுகளுக்குக் கடத்தப்பட்டிருப்பதாகக் கூறுகிறது, குளோபல் இன்டகிரிட்டி என்ற தன்னார்வ அமைப்பு.

பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவைக் கொள்ளையடிக்கத்தான் குதித்திருக்கிறார்கள் என்பதையும், உமிகூட கொண்டு வராமல் அவலைத் தின்னும் பகற்கொள்ளைக் கூட்டம்தான் பன்னாட்டு நிறுவனங்கள் என்பதையும் இந்த உண்மைகளிலிருந்து புரிந்து கொள்ளலாம். ஆனால் மன்மோகன் சிங் கும்பலோ, பன்னாட்டு நிறுவனங்கள் அனைத்தும் ஏதோ இந்தியாவை வளமாக மாற்றுவதற்கும் இங்குள்ள ஏழைபாழைகளுக்கு வேலை கொடுப்பதற்கும்தான் அமெரிக்க டாலர்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டு இங்கு வருவதாகவும், அதைத் தடுப்பது நாட்டின் முன்னேற்றத்தையே தடுப்பதாகும் எனத் திரும்பத்திரும்பப் பச்சையாகப் புளுகி வருகிறார்கள்.

தனியார்மயம்-தாராளமயம் திணித்துள்ள உழைப்புச் சுரண்டலும், அக்கொள்கைகளின் விளைவாக நடந்து வரும் மூலதனக் கடத்தலும்தான் இந்திய மக்கள் வறுமையில் வாடுவதற்கு முதன்மையான காரணமாகும். இவையிரண்டையும் தடுப்பதற்குப் பதிலாக, தொழிற்சங்கச் சட்டங்களை மேலும் தாராளமயமாக்க வேண்டும் எனச் சாமியாடி வருகிறார், மன்மோகன் சிங். இதன் பொருள் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு இன்னும் கூடுதலாக இலாபம் கிடைக்க வேண்டும் என்பதுதான். ப.சிதம்பரமோ, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப் படவிருந்த வரி ஏய்ப்புத் தடுப்புச் சட்டம் என்ற பூதத்தை நாங்கள் புதைத்துவிட்டோம் என நிதியாதிக்கக் கும்பலிடம் உறுதியளிக்கிறார். இதன் பொருள் வரி ஏய்ப்பைச் சட்டபூர்வமாக்குவதுதான்.

● திப்பு

# மாலி ஆக்கிரமிப்பு:


# நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியதே சாக்கு!

**இஸ்லாமிய பயங்கரவாதப் பூச்சாண்டியைக் காட்டி மாலி ஆக்கிரமிப்பை மேற்குலக ஏகாதிபத்தியங்கள் நியாயப்படுத்துகின்றன.**

கடந்த ஈராண்டுகளில் ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள லிபியா, ஐவரி கோஸ்ட் - என அடுத்தடுத்து இரு நாடுகளின் மீது போர் தொடுத்து தமது முன்னாள் காலனிகளை மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் மீண்டும் கைப்பற்றியுள்ளன. தனது ஆதிக்க வளையத்தை விரிவாக்கி, அடுத்த கட்டமாக இப்போது மாலியின் மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்துள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், பிரெஞ்சு காலனியாதிக்கத்திலிருந்து பெயரளவிலான சுதந்திரமடைந்த வட ஆப்பிரிக்காவிலுள்ள மாலியை பிரெஞ்சுப் படைகளும், பீரங்கிகளும், போர் விமானங்களும் சூறையாடிக் கொண்டிருக்கின்றன. ஐவரி கோஸ்ட், நைஜீரியா, டோகோ, பெனின், சாட் முதலான நாடுகளிலிருந்தும் இந்த காலனியாதிக்கப் போருக்காகப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. இக்கொடிய போரினால் இதுவரை 4இலட்சம் மக்கள் அண்டை நாடுகளில் அகதிகளாகக் குவிந்துள்ளனர். பிரான்சின் ஆக்கிரமிப்பை ஆதரிக்கும் ஜெர்மனி, மேற்கு ஆப்பிரிக்க பொருளாதாரக் கூட்டமைப்புக்கு (ஈகோவாஸ்) ஆயுத உதவிகளோடு 7000 படைகளையும் அளித்துள்ளது. அமெரிக்காவோ, குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தும் ஆளில்லா விமானங்களை நைஜர் நாட்டில் தயாராக நிறுத்தி வைத்துள்ளது.

வடக்கே அல்ஜீரியாவும், கிழக்கே நைஜரும், தெற்கே பர்கினா பாசோ மற்றும் ஐவரி கோஸ்ட் ஆகிய நாடுகளும், மேற்கே மோரிடானா, செனகல் ஆகிய நாடுகளும் சூழ்ந்த மாலி, பருத்தி பெருமளவில் விளையும் நாடு. தங்கமும் யுரேனியமும் பாஸ்பேட்டும் கனிம வளங்களும் நிறைந்த நாடு. ஆனால், நாட்டின் பாதிக்கும் மேற்பட்ட மக்களோ வறுமையில் தவிக்கின்றனர்.




ஒரு தேசிய இனமாக வளரும் போக்கு நிறைவுறாத போதிலும், மாலியின் வடபகுதியிலுள்ள அசாவத் பிராந்தியத்தின் நாடோடிகளான துவாரக் இனக்குழுவினர் மாலி அரசிடமிருந்து விடுதலை கோரி ''அசாவத் தேசிய விடுதலை இயக்க''த்தின் (எம்.என்.எல்.ஏ.) தலைமையில் 1990-களிலிருந்து போராடி வருகின்றனர். மாலி அரசின் பயங்கரவாத அடக்குமுறையால் அசாவத் இயக்கப் போராளிகள் அண்டை நாடான லிபியாவில் தஞ்சமடைந்து, அன்றைய கடாஃபியின் இராணுவத்தில் முறைசாரா சிப்பாய்களாகச் செயல்பட்டனர். கடாஃபி ஆட்சி வீழ்ந்ததும், ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு மாலிக்குத் திரும்பிய அவர்கள், மாலியின் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிரான போரைத் தொடர்ந்தனர். அல்கய்தாவுடன் தொடர்புடைய இப்பகுதியிலுள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகள் இவர்களோடு இணைந்து கொண்டு போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர். மாலியின் வடபகுதியில் முன்னேறிய இப்போராட்டங்களை ஒடுக்க முடியாமல் மாலியின் இராணுவம் திணறிய நிலையில், கடந்த ஆண்டில் அசாவத் தேசிய விடுதலை இயக்கத்தினர் அசாவத் பிராந்தியத்தைத் தனிநாடாக அறிவித்தனர்.

1960-இல் பெயரளவில் சுதந்திரமடைந்து, பொதுத் தேர்தலும் அதிபராட்சியும் மாலியில் நிறுவப்பட்ட போதிலும், 1968-இலும், 1991-இலும் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகள் நடந்து, இராணுவக் கும்பலின் தலைமையிலான 'சட்டவாத' ஆட்சியே நீண்டகாலமாக நிலவியது. இந்நிலையில், கடந்த 2012 மார்ச்சில், வடபகுதி துவாரக் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கத் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டி, அமெரிக்காவினால் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத் தளபதியான சனோகோ தலைமையிலான ஒரு பிரிவு இராணுவக் கும்பல் ஆட்சியைக் கைப்பற்றி, இச்சட்டவாத ஆட்சியையும் ரத்து செய்து அப்பட்டமான இராணுவ சர்வாதிகார ஆட்சியை நிறுவியுள்ளது. இருப்பினும், இந்த ஆட்சிக் கவிழ்ப்பை இராணுவத்தின் ஒரு பிரிவு எதிர்ப்பதாலும், ஆளும் கும்பல்களுக்கிடையே பிளவும் அதிருப்தியும் நீடிப்பதாலும், தற்போது ஆட்சிக்கு வந்துள்ள இராணுவக் கும்பலாலும் வட

பகுதி மக்களின் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை.



பிரான்சின் ஆக்கிரமிப்புப் போரினால் அகதிகளாக்கப்பட்டு அவலத்தில் உழலும் மாலி நாட்டு மக்கள்.

இதற்கிடையில், 2012 ஜூன் மாதத்தில் அசாவத் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களுக்குமிடையே முரண்பாடு முற்றி ஆயுத மோதல்களாக மாறியது. இஸ்லாமியத் தீவிரவாதிகள் அசாவத் இயக்கப் போராளிகளை விரட்டியடித்துவிட்டு, தமது கட்டுப்பாட்டில் அசாவத் பிராந்தியத்தைப் பிடித்துக் கொண்டு, இஸ்லாமிய ஷாரியத் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இஸ்லாமிய மெஹ்ரப் அல் கய்தா குழு (ஏ.கியூ.ஐ.எம்.), அன்சார் அல் டின் என்ற துவாரக் இனக்குழுவைச் சேர்ந்த இஸ்லாமியத் தீவிரவாதக் குழு, மேற்கு ஆப்பிரிக்காவின் ஜிகாத் குழு முதலான இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் இப்பகுதியில் செயல்படுகின்றன. மாலி அரசு மற்றும் இராணுவத்தின் பலவீனத்தையும் பிளவையும் சாதகமாக்கிக் கொண்டு, அடுத்தடுத்து பல முக்கிய நகரங்களைக் கைப்பற்றிய இத்தீவிரவாதக் குழுக்கள் தெற்கு நோக்கி முன்னேறியதும், பிரான்ஸ் நேரடியாக இராணுவத் தாக்குதலைத் தொடங்கியது. இஸ்லாமியத் தீவிரவாதிகளால் விரட்டியடிக்கப்பட்டு பிரான்சுக்குத் தப்பியோடிய அசாவத் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர்களோ, இப்போரில் பிரான்சை ஆதரிப்பதன் மூலம் இஸ்லாமியத் தீவிரவாதிகளை விரட்டிவிட்டு தமது கட்டுப்பாட்டில் அசாவத் பிராந்தியத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றனர்.

சூஃபி மார்க்கத்தைப் பின்பற்றும் துவாரக் இனக்குழுவினர் நிறைந்துள்ள வடபகுதியில், வஹாபி மார்க்கத்தைத் திணித்து தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள இஸ்லாமிய தீவிரவாதிகள், சூஃபி மரபிலான பண்பாட்டுச் சின்னங்களையும், டிம்புக்டு பிராந்தியத்திலுள்ள யுனெஸ்கோவின் பாரம்பரிய வரலாற்று சின்னமாகவுள்ள மசூதியையும், சூஃபி ஞானியின் நினைவுச் சின்னத்தையும் சிதைத்து நாசமாக்கி எரித்துள்ளனர். மாலி நாட்டு இசை ஆப்பிரிக்க நாடுகளில் பிரபலமானது. ஆனால், இஸ்லாமியத் தீவிரவாதிகளோ யாரும் வாயைத் திறந்து பாடவோ, பாடல்களைக் கேட்கவோ கூடாது என்று காட்டுமிராண்டித்தனமாகத் தடை விதித்துள்ளனர்.

மாலியின் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போரை நடத்துவதாக ஒரு தவறான கருத்து நிலவுகிறது. ஆனால் இந்த இஸ்லாமியத் தீவிரவாதிகள், அமெரிக்கக் கைக்கூலியான சவூதி அரேபியாவின் பணத்தில் வளர்ந்தவர்கள். லிபியாவில் கடாஃபியை வீழ்த்த நேற்றுவரை அமெரிக்காவின் கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வினாலும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களாலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வளர்த்துவிடப்பட்ட கூலிப்படையினர்தான் இவர்கள். பிரான்சின் மறைமுக ஆதரவோடு இயங்கும் சிரியா மற்றும் அல்ஜீரிய இஸ்லாமியப் பயங்கரவாதிகளின் பங்காளிகள்தான் இவர்கள்.

ஆப்பிரிக்கக் கண்டத்தின் மூலவளங்களைக் கைப்பற்றிக் கொள்ளையிடுவதும், வர்த்தக - பொருளாதாரக் கூட்டுகள் மூலம் செல்வாக்கு செலுத்திவரும் சீனாவை ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேற்றி தமது இரும்புப் பிடியை உறுதிப்படுத்துவதும்தான் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் ஆப்பிரிக்கப் போர்த்தந்திரத் திட்டம். அதன்படியே, லிபியா தொடங்கி அடுத்தடுத்து பல நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகள் தமது காலனியாதிக்கப் பிடியை இறுக்கி வருகின்றனர். எனவேதான், மாலியின் ஆக்கிரமிப்புப் போர் மாலியைப் பற்றியது மட்டுமல்ல. அது ஆப்பிரிக்கா முழுவதையும் ஆக்கிரமிக்கும் திட்டத்துடன் ஏகாதிபத்தியங்கள் நடத்தும் காலனியாதிக்கப் போராகும்.

நேற்றுவரை இஸ்லாமியத் தீவிரவாதத்தை ஆப்பிரிக்கக் கண்டத்தில் வளர்த்துவிட்டுப் பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொண்டதும் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள்தான். இப்போது இஸ்லாமியத் தீவிரவாதத்தை முறியடிப்பது என்ற பெயரில் மாலியின் கனிம வளங்களைச் சூறையாடப் போர் தொடுப்பதும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள்தான். ஏகாதிபத்தியங்கள் உள்ளவரை காலனியாதிக்கமும் ஆக்கிரமிப்புப் போர்களும் ஓயாது; உலகெங்குமுள்ள புரட்சிகர-ஜனநாயக சக்திகள் அணிதிரண்டு காலனியாதிக்க ஓநாய்களை விரட்டியடிக்காதவரை எந்த நாடும் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியாது என்ற உண்மையை உலகுக்கு உணர்த்திவிட்டு நொறுங்கி விழுந்து கொண்டிருக்கிறது மாலி.

● தனபால்

# ஆணாதிக்கக் காலிகளுக்குப் பாடம் புகட்டிய போராட்டம்!

11.2.2013 அன்று திருச்சி பாலக்கரையிலிருந்து சுப்பிரமணியபுரம் செல்வதற்காக காலை 11 மணியளவில் தனியார் பேருந்தில் கால் வைக்கக்கூட முடியாத அளவிலான கூட்டத்தில் பெ.வி.மு. தோழர் மகாலட்சுமி பயணித்தபோது, அந்த நெரிசலில் பயணிகளை மேலும் உள்ளே போகுமாறு நடத்துனர் கேவலமாகத் திட்டியதோடு, பெண்களை ஒருமையில் ஏசி அடிக்காத குறையாக உறுமினான். ‘‘பெண் பயணிகள் எல்லாம் உங்களுக்குப் பொண்டாட்டியா? இப்படி மரியாதை இல்லாம பேசாதீங்க! ’’ என்று பெ.வி.மு.தோழர் கண்டித்துப் பேசவும், ‘‘இல்லடி; வப்பாட்டி!’’ என்று நக்கலாக ஓட்டுநர் கேலி செய்தான். உடனே அப்பெண் தோழர், ‘‘மரியாதையா பேசலைன்னா செருப்பாலேயே அடிப்பேன்’’ என்று செருப்பைத் தூக்கிக் காட்டியுள்ளார். ஆணாதிக்கத் திமிர் பிடித்த அந்த ஓட்டுநர் பேருந்தை நடுவீதியில் நிறுத்தி, ‘‘நானும் செருப்பால அடிப்பேன்டி!’’ என்றும் ’’வாடி, போடி’’ என்றும் தகாத வார்த்தைகளால் ஏசி நாலாந்தர பொறுக்கியாக நடந்து கொண்டான். இப்படித் தொடர்ந்து வாதங்களுடன் பேருந்தில் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது, ‘‘ போடி, இதோ ஏர்போர்ட் போலீசு ஸ்டேஷன் இங்கதான் இருக்கு; இறங்குடி, போய் என்ன வேணும்னாலும் செய்யுடி!’’ என்று அவரை இறக்கிவிட்டு பேருந்தைக் கிளப்பிக் கொண்டு சென்றான்.

ஏர்போர்ட் போலீசு நிலையத்தில் தோழர் புகார் கொடுக்க முற்பட்டபோது, சம்பவம் நடந்த கே.கே.நகர் போலீசு நிலையத்தில்தான் புகார் கொடுக்க வேண்டுமென்று தங்கள் எல்லை வரம்பைக் காட்டியது போலீசு. பின்னர் கே.கே. நகரில் தோழர் புகார் கொடுக்கச் சென்றபோது, தகவல் அறிந்து ம.உ.பா.மையத்தின் வழக்குரைஞர்களும் புரட்சிகர அமைப்பின் தோழர்களும் அங்கு திரண்டனர். பின்னர் போலீசார் நைச்சியமாகவும் மிரட்டியும் புகாரை திரும்பப் பெறுமாறு நிர்ப்பந்தத்த போதிலும், தோழர்கள் இதற்கு உடன்படவில்லை. நீண்ட நேரமாகியும் வழக்கைப் பதிவு செய்யாமல் இழுத்தடித்த போலீசு, பின்னர் சாதாரண குற்ற வழக்குகளின் கீழ் பதிவு செய்ய முயற்சித்தது. குற்றவியல் சட்டங்களின் கீழ் வழக்கைப் பதிவு செய்யாமல் இரவு 10 மணிவரை தொடர்ந்து போலீசு இழுத்தடித்துக் கொண்டே போகவும், போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு தோழர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கினர். இப்போராட்டத்துக்குப் பின்னரே, இரவு 11 மணியளவில் அக்குற்றவாளிகள் மீது பெண்களைத் தொல்லைப்படுத்துவதிலிருந்து பாதுகாக்கும் குற்றவியல் சட்டப்பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்கைப் பதிவு செய்தனர்.

பெண்கள் மீதான காலித்தனங்களில் ஈடுபடும் பொறுக்கிகளைச் சட்டரீதியாகத் தண்டிப்பதற்கே நீண்ட நெடிய போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளதையும், அமைப்பு சார்ந்த போராட்டங்களின் மூலம்தான் குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும் என்பதையும், சட்டத்தை அமல்படுத்தும் அரசும் போலீசும் நீதித்துறையும்தான் பெண்ணினத்துக்கு எதிரான முதல் குற்றவாளிகள் என்பதையும் இப்போராட்டம் நிரூபித்துக் காட்டியது.

– பு.ஜ. செய்தியாளர், திருச்சி.

# பாலியல் குற்றவாளியைப் பாதுகாக்கும் போலீசுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்!




திருச்சி – ஜீயபுரத்தை அடுத்துள்ள கம்பரசம்பேட்டையைச் சேர்ந்த ஜாபர் அலி என்ற இளைஞன், 4வயது சிறுமியிடம் பாலியல் வன்முறையில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, அச்சிறுமியின் பெற்றோர்கள் போலீசில் புகார் செய்தனர். ஆனால் போலீசோ, அவனைத் தண்டனையிலிருந்து தப்பிக்க வைக்கும் நோக்கத்தோடு சாதாரண வழக்குகளின் கீழ் குற்றத்தைப் பதிவுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முயற்சித்தது.

இம்மோசடித்தனத்தை அறிந்ததும் திருச்சியில் இயங்கிவரும் ம.க.இ.க., பு.மா.இ.மு., பெ.வி.மு., பு.ஜ.தொ.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் குடும்பத்தோடு நீதிமன்றத்தில் அறுந்த செருப்பு, அழுகிய முட்டை, மாட்டுச் சாணத்தோடு 18.2.2013 அன்று அவனை வரவேற்கக் காத்திருந்தனர். ஆனால் இரவு 7 மணி வரை அக்குற்றவாளியை நீதிமன்றத்துக்கே கொண்டுவராமல் போலீசு இழுத்தடித்ததால், இதை எதிர்த்து ம.உ.பா.மையத்தின் வழக்குரைஞர்களும் புரட்சிகர அமைப்பின் தோழர்களும் நீதிமன்ற வாயிலை மறித்து, ‘‘பிணையில் வெளிவர முடியாத பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட வேண்டும்; இக்குற்றவாளியை கோர்ட்டில்தான் ஆஜர்படுத்த வேண்டும்; நீதிபதி வீட்டில் இரகசியமாக ஆஜர்படுத்தக் கூடாது!’’ என்ற முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பின்னர் போலீசார் அக்குற்றவாளிக்கு மருத்துவப் பரிசோதனை செய்யவேண்டியுள்ளதால், மறுநாள் காலை 6 மணிக்கு ஆஜர்படுத்துவதாக வாக்குறுதி அளித்தனர். ஆனால், இரவு 10 மணியளவில் நீதிபதியின் வீட்டிற்கு அக்குற்றவாளியைப் போலீசார் திருட்டுத்தனமாகக் கொண்டுசென்று ஆஜர்படுத்தியுள்ளனர்.

கவனத்துக்கு வந்த ஒரு பாலியல் வன்முறை வழக்கிற்காக இவ்வளவு போராட வேண்டியிருப்பதையும், போராடிய பின்னரும் சட்டத்தை அமல்படுத்தும் உறுப்புகளான போலீசும் நீதித்துறையும் குற்றவாளியைப் பாதுகாத்துள்ள இம்மோசடித்தனத்தை அம்பலப்படுத்தியும் தோழர்கள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

–பு.ஜ. செய்தியாளர், திருச்சி.

# “மானாட மயிலாட - ஆபாசக்கூத்தை உடனே நிறுத்து!”

## – கலைஞர் டி.வி. முன்பாக பெ.வி.மு. ஆர்ப்பாட்டம்.

“பாலியல் வன்முறையைத் தூண்டும் மானாட மயிலாட ஆபாசக் குத்தாட்டங்களை உடனே நிறுத்து! சன், கலைஞர், விஜய் டி.வி. முதலான நச்சுப் பாம்புகளே, காமவெறியைத் தூண்டும் ஆபாசக் குத்தாட்டங்களையும் விளம்பரங்களையும் உடனே நிறுத்து!” என்ற முழக்கங்களுடன் பெண்கள் விடுதலை முன்னணியின் தோழர்கள் கலைஞர் டிவி முன்பாக பிப்.28 அன்று காலை 11 மணியளவில் திடீர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்துக்குத் திரண்ட தோழர்கள் பேருந்துகளை விட்டு இறங்கியதுமே கைது செய்யத் தயாராக குவிக்கப் பட்டிருந்த போலீசு, ஆர்ப்பாட்டம் தொடங்கிய அடுத்த நிமிடமே, “சரி சரி, மீடியாக்காரங்க உங்க ஆர்ப்பாட்டத்தைப் படம் எடுத்துட்டாங்க, உடனே கிளம்புங்க” என்று தோழர்களைப் பிடித்துத் தள்ளத் தொடங்கியது. இதை எதிர்த்து மக்களிடம் எங்கள் கருத்தைச் சொல்ல வேண்டும் என்று தோழர்கள் வாதாடி, “பெண்களைப் போகப் பொருளாக ஆணுக்குச் சேவை செய்யும் அடிமைகளாகச் சித்தரிக்கும் விளம்பரங்களையும், சீரியல் நிகழ்ச்சிகளையும், சினிமாக்களையும் ஒழித்துக் கட்ட ஓரணியில் திரள்வோம்! பார்ப்பன சாதிய ஆதிக்கத்தையும் மறுகாலனியச் சீரழிவுப் பண்பாட்டையும் பாதுகாக்கும் இன்றைய அரசியலமைப்பு முறையை தாக்கித் தகர்க்க அணிதிரள்வோம்!” என்ற முழக்கங்கள் எங்கும் எதிரொலிக்க உணர்வோடு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்தின் நோக்கத்தையும் அவசியத்தையும் ஊடகங்களிடம் விளக்கிய பெ.வி.மு. செயலர் தோழர் உஷா, தொலைக்காட்சிகள் இத்தகைய ஆபாசங்களை நிறுத்தாவிட்டால் அடுத்தகட்டப் போராட்டங்கள் இன்னும் வீரியமாகவும் வீச்சாகவும் நடக்கும் என்று எச்சரித்தார். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பெண்கள் குழந்தைகள் உள்ளிட்டு 50-க்கும் மேற்பட்டோரைக் கைது செய்த போலீசு, பின்னர் மாலையில் விடுவித்தது.




– பு.ஜ. செய்தியாளர், சென்னை

# பொய் வழக்குகளையும் அடக்குமுறைகளையும் தோலுரித்துக் காட்டிய பு.மா.இ.மு.வின் பொதுக்கூட்டம்

சென்னை - மதுரவாயல் ஏரிக்கரை பகுதியில் ஒருவர் கொல்லப்பட்டதையொட்டி, இதில் சம்பந்தமேயில்லாத பள்ளி மாணவர்களைப் போலீசு கைது செய்வதை எதிர்த்துக் கேட்ட ‘குற்ற’த்துக்காக திவாகர், குமரேசன் எனுமிரு பு.மா.இ.மு. தோழர்களை இழுத்துச் சென்று வதைத்த போலீசு, அவர்களைக் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைத்தது. இதை எதிர்த்து போலீசு நிலையத்தை முற்றுகையிட்ட பகுதிவாழ் உழைக்கும் மக்களை மிருகத்தனமாகத் தாக்கிய போலீசு, 50 பேரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. உள்ளூரில் போலீசு கையாள் ஒருவனைக் கொண்டு புகார் கொடுக்க வைத்து பு.மா.இ.மு. தோழர்கள் 17 பேர் மீது கொலைமுயற்சி வழக்கு பதிவு செய்ததோடு, அடுத்தடுத்து பல தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டது. தொடரும் போலீசின் அடக்குமுறைகளை எதிர்த்து, “உழைக்கும் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதை எதிர்த்துப் போராடுபவர்கள் மீதான போலீசின் பொய்வழக்குகளையும் அடக்குமுறைகளையும் முறியடிப்போம்!” என்ற தலைப்பில் 23.2.2013 அன்று மாலை சென்னை மதுரவாயல்-நெற்குன்றம் பகுதியில் பு.மா.இ.மு. பொதுக்கூட்டத்தை நடத்தியது.



பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் நடந்த இப்பொதுக்கூட்டத்தில், சென்னை பு.மா.இ.மு. செயலர் தோழர் கார்த்திகேயன், ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு ஆகியோர் போலீசின் அடக்குமுறைகளை அம்பலப்படுத்தி, தீவிரமாகிவரும் மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராக மாணவர்களும் இளைஞர்களும் உழைக்கும் மக்களுடன் இணைந்து போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தினர். பலத்த கரவொலிக்கிடையே, சிறையிடப்பட்டிருந்த தோழர்கள் திவாகர், குமரேசன் ஆகியோர் மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்டு வந்த இப்பொதுக்கூட்டமும், ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும், அரசு பாசிசமயமாகிவரும் சூழலில் அதை முறியடிக்க நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள்தான் ஒரே மாற்று என்பதை மக்களின் நெஞ்சங்களில் ஆழமாகப் பதிய வைத்தது.

-பு.ஜ. செய்தியாளர், சென்னை.

## மகாராஷ்டிரம்:

# காவி, காக்கி, சாதி மூன்றும் ஒரே நிறம்!

**முசுலீம் தீவிரவாதம் குறித்து ஓலமிடும் பத்திரிகைகள், காவி–காக்கி–சாதி பயங்கரவாதம் குறித்து அடக்கி வாசிக்கின்றன.**

ஆதிக்க சாதிப் பெண்ணைக் காதலித்ததற்காக, ஜனவரி 1-ஆம் தேதியன்று, மகாராஷ்டிர மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவர் துண்டு துண்டாக வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். அவருடைய நண்பர்கள் இருவரும் இவருடன் கொல்லப்பட்டுள்ளனர். அஹமத் நகர் மாவட்டத்தின் நவேசா பட்டாவிலிருக்கும் திரிமூர்த்தி பவன் பிரதிஸ்தான் எனும் கல்லூரியின் துப்புரவுப் பணியாளர்களான சச்சின் காரு (வயது 24) , சந்தீப் (25), ராகுல் (20) ஆகியோரே இவ்வாறு கொல்லப்பட்டவர்கள். இவர்களில் சச்சினும் இதே கல்லூரியில் படித்து வந்த ராதாவும் காதலித்திருக்கின்றனர். ராதா, ஆதிக்க சாதியை சேர்ந்த போபட் தரன்டாலே என்பவரின் மகளாவார்.

தரன்டாலே குடும்பத்தின் கடும் எதிர்ப்பையும் மீறித் திருமணம் செய்யும் முடிவில் இருவரும் இருந்ததால், சச்சினைக் கொல்வதற்குச் சதித்திட்டம் ஒன்றை அரங்கேற்றியிருக்கின்றனர். இரு தரப்பினருக்கும் அறிமுகமான அசோக் என்ற நண்பர், தரன்டாலேவின் பண்ணை வீட்டில் இருக்கும் ‘‘செப்டிக் டேங்கை’’ கழுவ வருமாறு சச்சினையும் மற்ற இருவரையும் அழைத்துச் சென்றிருக்கிறார்.

அன்று மாலையில் போலீசைத் தொடர்பு கொண்ட தரன்டாலே தரப்பினர், சச்சினும் ராகுலும் சேர்ந்து சந்தீப்பைக் கொன்றுவிட்டுத் தப்பிவிட்டதாகவும், செப்டிக் டேங்கின் உள்ளே சந்தீப் இறந்துகிடப்பதாகவும் தகவல் கொடுத்தனர். சந்தீப்பின் முகத்தில் காயங்கள் இருந்தன. தேடுதலுக்குப் பின் அருகில் இருந்த வறண்ட கிணறு ஒன்றில் ராகுலின் உடலைக் கண்டுபிடித்தது போலீசு. சச்சினுடைய தலை, கை,கால்கள் அனைத்தும் வெட்டி வெவ்வேறு இடங்களில் வீசப்பட்டிருந்தன.

சாதிவெறிக் கொலை என்று தெளிவாகத் தெரிந்தும் இதனை மூடிமறைக்கவே போலீசு முயன்றது. கொல்லப்பட்ட சந்தீப்பின் அண்ணன் பங்கஜ் ஒரு இராணுவ சிப்பாய். செய்தி அறிந்து அவர் காஷ்மீரிலிருந்து நேரில் வந்து விடாப்பிடியாகப் போராடியதனால்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டு, தரன்டாலே குடும்பத்தினர் 5 பேர்களை போலீசு கைது செய்திருக்கிறது. இருப்பினும் கொல்லப்பட்ட இளைஞர்களின் குடும்பத்தினர் அனைவரும் உயிருக்குப் பயந்து ஊரை விட்டே சென்று விட்டனர்.

இந்த ஆதிக்க சாதி வெறிக் கொலை சம்பவம் நடந்து முடிந்து ஐந்து நாட்கள் கழித்து, ஜனவரி 6-ஆம் தேதியன்று மகாராஷ்டிராவின் துலே நகரில் உணவு விடுதி ஒன்றில் கடைக்காரருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு இந்து-முஸ்லிம் மோதலாக வெடித்தது. கலவரத்தைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் குவிக்கப்பட்ட போலீசுப் படை நேரடியாகவே முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதலில் ஈடுபட்டது. எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். மேலும் 34 முஸ்லிம்களின் உடலில் குண்டு பாய்ந்திருக்கிறது. முழங்காலுக்கு கீழே சுட



இந்து மதவெறி – அரசு பயங்கரவாதத்தின் அட்டூழியம்: கொள்ளையடிக்கப்பட்டு, தீவைத்து நாசமாக்கப்பட்ட இசுலாமியர்களின் வீடு மற்றும் உடைமைகள்.



ஆதிக்க சாதியைச் சேர்ந்த பெண்ணைக் காதலித்ததற்காகவே படுகொலை செய்யப்பட்ட
சச்சின் காரு (இடது) மற்றும் அவரது நண்பர்கள் சந்தீப், ராகுல்.

வேண்டும் என்று விதி இருந்தும், அனைவருக்குமே தலையிலும், கழுத்திலும், விலாவிலும், முதுகிலும் தான் குண்டு பாய்ந்திருக்கிறது. தங்கள் மீது ஆசிட் வீசப் பட்டதனால்தான் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக போலீசு ஊடகங்களிடம் புளுகிய போதிலும், போலீசே பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் கூட ஆசிட் வீச்சு பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

இந்துக்களும் முஸ்லிம்களும் இரு தரப்பாகப் பிரிந்து நின்று ஒருவர் மீது ஒருவர் கல் வீசிக் கொண்டிருந்த போது, இந்துக்களுடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம் களை மட்டுமே தாக்கியிருக்கிறது போலீசு. ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துவிட்டு, முசுலிம் குடியிருப்பு களைக் கொள்ளையடித்திருக்கிறது. மறுநாள் விடிவ தற்குள் தடயங்கள் ஏதுமில்லாமல் கலவரம் நடைபெற்ற பகுதி முழுவதும் கழுவி சுத்தம் செய்யப்பட்டுவிட்டது. பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் புகார் கொடுக்க வந்த போது, ''புகார் கொடுத்தால் உங்கள் மீதே வழக்கு போட்டு உள்ளே வைத்து விடுவோம்'' என்று அச்சுறுத்தி விரட்டியிருக்கிறது போலீசு. முஸ்லிம் பகுதிகளில் வீடு வீடாகச் சோதனை நடத்திக் கைது செய்ய இருப்பதாக ஒரு வதந்தியை போலீசே திட்டமிட்டு கிளப்பி விட்ட தனால் பீதியடைந்து, மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த காயமடைந்த முஸ்லிம்களெல்லாம் அவசர அவசரமாக வெளியேறியிருக்கின்றனர்.

இந்த மதவெறி - அரசு பயங்கரவாதப் படுகொலை கள் நடந்து 9 நாட்களுக்குப் பின்னரே துலேவுக்கு மாநில முதல்வரும் உள்துறை அமைச்சரும் வந்தனர். போலீசே முன்நின்று கலவரக்காரர்களைத் தூண்டி விடுவதும், கடைகளில் புகுந்து கொள்ளையடிப்பதும் செல்பேசி காமெராக்களில் பதிவு செய்யப்பட்டு தொலைக்காட்சி களிலும் இணையத்திலும் வெளிவந்துவிட்டதால், போலீசின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந் தம் அரசுக்கு ஏற்பட்டு விட்டது. சொத்துகளைச் சூறை யாடிய 6 போலீசார் மட்டும் தற்காலிகப் பணிநீக்கம் செய் யப்பட்டிருக்கின்றனர்.

மாநில முதல்வர் இந்த சம்பவத்தை போலீசுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல் எனச் சித்த ரித்ததன் மூலம், இந்து வெறியர்களைப் பாதுகாத்திருப் பதுடன், இந்து வெறியர்களின் அறிவிக்கப்படாத அடியாள் படையே போலீசு என்பதையும் உறுதிப்படுத் தியிருக்கிறார்.

அதே ஜனவரி மாதத்தில் துலே கலவரத்தை அடுத்த ஒரு வாரத்தில், அந்நகரிலுள்ள அம்பேத்கர் சமூக சேவைக் கல்லூரியின் பேராசிரியர் டாக்டர் பிரமோத் சுக் தேவ் பூம்பே இந்து மதவெறிக் கும்பலால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இவர், இந்தியாவில் சமூக சீர்திருத்த இயக்கங்கள் குறித்து வகுப்பில் விளக்கும்போது, இராமாயணத்தில் சில சம் பவங்கள் சாதி ஒடுக்குமுறையை ஆதரிப்பதைக் குறிப் பிட்டுப் பேசியிருக்கிறார். இதனை இந்து மதவெறி அமைப்பைச் சேர்ந்த ஒரு மாணவன் தனது செல்போன் காமெராவில் பதிவு செய்து, பஜ்ரங் தள், வி.எச்.பி. யினரிடையே சுற்றுக்கு விட்டிருக்கிறான்.

பூம்பே இந்து மதத்தை இழிவு படுத்துவதாகவும், இந்துக்கள் மனம் புண்பட்டுவிட்டதாகவும், பிரமோத் பூம்பேவை வேலையை விட்டு நீக்குமாறும் இந்து மத வெறியினர் பிரச்சினையைத் தொடங்கினர். கல்லூரி முதல்வரும் இதற்கு விளக்கம் கேட்டு பேராசிரியருக்கு நோட்டீஸ் அனுப்பி இருந்தார். யாரையும் புண்படுத்தும் நோக்கம் தனக்கில்லை என்று விளக்கமளித்த பூம்பே மன்னிப்பும் கேட்டிருந்தார். கல்லூரி சார்பில் துலே விலுள்ள ராமர் கோவிலில் பூசை நடத்தப்பட்டு சமாதான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலையில் கல்லூரிக்குள் நுழைந்த பஜ்ரங் தள், விஷ்வ இந்து பரி ஷத் குண்டர்கள், பூம்பேவை அடித்து உதைத்து மாடிப் படிகளில் உருட்டிவிட்டுக் கொலை மிரட்டலும் விடுத் துள்ளனர். இத்தாக்குதலில் வட மராட்டிய பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினரும் பங்கேற்றதாகக் கூறியிருக்கிறார் கல்லூரி முதல்வர்.

•••

மராட்டிய மாநிலத்தில் நடைபெற்றுள்ள இம்மூன்று சம்பவங்களும் தொடர்பற்றவையோ தற்செயலாக ஒரே மாதத்தில் நடந்துவிட்டவையோ அல்ல. தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மீதான சாதிவெறிப் படுகொலையை

நடத்தியவர்களும், பேராசிரியர் மீதான தாக்குதல் தொடுத்தவர்களும் ஒரே விதமான சாதி ஆதிக்க சக்திகள்தான். முஸ்லிம்கள் தாக்கப்பட்ட அதே துலே நகரில்தான், பேராசிரியரும் தாக்கப்பட்டிருக்கிறார். இது இந்துமதவெறி சக்திகளின் வளர்ந்து வரும் வலிமையைக் காட்டுகின்றன.

தமிழகத்தைப் போலவே தொழில்மயமான மாநிலம் மகாராட்டிரம். தமிழகத்தைப் போலவே சீர்திருத்தங்களின் மூலம் சலுகை பெற்ற இடைநிலைச் சாதிகளின் மேட்டுக்குடியினர் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் மாநிலம். இந்தப் பிரிவினர்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராகக் கவுரவக் கொலைகள் நடத்துவதுடன், இந்துவெறி அமைப்புகளின் முன்னணியில் நின்று முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தையும் நடத்துகிறார்கள். இதே பிரிவினர்தான், தன்னை மதச் சார்பற்ற கட்சியாக சித்தரித்தக் கொள்ளும் காங்கிரசு, பவார்கட்சி உள்ளிட்ட கட்சிகளில் மட்டுமின்றி, போலீசு உள்ளிட்ட அதிகாரவர்க்க நிறுவனங்களிலும் செல்வாக்கு செலுத்துகிறார்கள்.

மும்பை, குஜராத், கயர்லாஞ்சி - எனத் தொடர்ந்து கொண்டிருக்கும் இத்தகைய சம்பவங்கள், போலீசையோ இவ்வரசமைப்பையோ சீர்திருத்தவே முடியாது என்பதையே மீண்டும் மீண்டும் காட்டுகின்றன.

● கதிர்

# அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!




சென்னையில், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில், உயர்நீதிமன்ற வழக்குரைஞர்களை ஒருங்கிணைத்து சென்னை உயர் நீதிமன்ற வாயிலில் அப்சல்குரு அநியாயமாகத் தூக்கிலிடப்பட்டதை எதிர்த்து 11.2.2013 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ''அதிகாரத்தைத் தக்கவைக்க பா.ஜ.க. போட்ட நாடகம்தான் நாடாளுமன்றத் தாக்குதல்! ஊழல் கறையை மறைப்பதற்கு காங்கிரசின் சூழ்ச்சிதான் அப்சல் குருவின் தூக்குத் தண்டனை! ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கு சட்டவிரோத விசாரணை நடத்தி அநீதியாக வழங்கப்பட்டதே அப்சல் குருவின் தூக்குத் தண்டனை! தேசிய வெறியைக் கிளறிவிட்டு தீவிரவாதப் பீதியூட்டும் காங்கிரசு, பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழித்தெறிவோம்! அரசு பயங்கரவாதத்தை சட்டபூர்வமாக்கும் நடவடிக்கையை முறியடிக்கப் போராடுவோம்!'' என்ற முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், இந்திய மக்களின் மனசாட்சியைத் திருப்திபடுத்துவதற்காக அப்சல் குருவைத் தூக்கிலிட வேண்டுமென அநியாயமாகத் தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றத்தைச் சாடியும், அப்சல் குருவுக்கு சட்டபூர்வ வாய்ப்புகள் கொடுக்கப்படாமல் வழக்கு விசாரணை நடத்தப்பட்டதையும், சந்தேகத்திற்கிடமின்றிக் குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் இந்து ஓட்டுக்களைக் கைப்பற்ற பாசிச காங்கிரசு அரசு இந்த தண்டனையை நிறைவேற்றியுள்ளதை எதிர்த்தும், இது சட்டவிரோத அரசியல் படுகொலையே என்பதை விளக்கியும், அரசு பயங்கரவாதம் சட்டபூர்வமாக நெருங்கி வருவதை உணர்த்தியும், காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தும் ம.உ.பா.மையத்தின் சென்னைக் கிளைச் செயலாளரான வழக்குரைஞர் மில்டன் மற்றும் வழக்குரைஞர் சங்கரசுப்பு ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

மதுரையில், சாட்சியமே இல்லாத வழக்கில் இந்துவெறியின் மனசாட்சியைத் திருப்திபடுத்தவே நிரபராதி அப்சல் குருவுக்கு அவசரமாகத் தூக்கு என்ற உண்மையை உணர்த்தி, 12.2.2013 அன்று காலை 10 மணியளவில் உயர் நீதிமன்ற வாயிலில் ம.உ.பா. மையத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ம.உ.பா.மையத்தின் மாவட்டத் துணைச்செயலர் வழக்குரைஞர் வாஞ்சிநாதன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், உயர் நீதிமன்ற மூத்த வழக்குரைஞர் லஜபதிராய், உயர் நீதிமன்ற வழக்குரைஞர் சங்கத் தலைவர் திருநாவுக்கரசு, ம.உ.பா.மையத்தின் மாவட்டச் செயலாளர் லயனல் அந்தோணிராஜ் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கடலூரில், 13.2.2013 அன்று ம.உ.பா.மையத்தின் சார்பில் ஆர்ப்பாட்டத்தை நடத்த முற்பட்டபோது, அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகக் கூறிய போலீசு, அனைவரையும் சுற்றி வளைத்துக் கைது செய்தது. பின்னர் மாவட்டப் போலீசு கண்காணிப்பாளரைச் சந்தித்து இக்கருத்துரிமை - ஜனநாயக உரிமைப் பறிப்புக்கு எதிராக வழக்குரைஞர்கள் வாதிட்ட பின்னர், ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதியளித்து கைது செய்யப்பட்ட அனைவரையும் போலீசு விடுவித்தது. அதைத் தொடர்ந்து 15.2.2013 அன்று காலை 11மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக, அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்து மாவட்டச் செயலாளர் செந்தில் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், செயற்குழு உறுப்பினர் கலையரசன், மாவட்டத் தலைவர் பொறியாளர் குணசேகரன் ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து, ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு சிறப்புரையாற்றினார்.

அநீதிக்கும் அடக்குமுறைக்கும் எதிராக வழக்குரைஞர்கள் நடத்திய இந்த ஆர்ப்பாட்டங்கள், இந்திய அரசின் சட்டவிரோத பாசிசப் பயங்கரவாதத்தை அம்பலப்படுத்துவதாக அமைந்தது.

- பு.ஜ.செய்தியாளர்கள்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.




வர முடியாது என்பதை உணர்த்திய அவர், இன்றைய அரசியலமைப்பு முறையே தோல்வியடைந்து செல்லரித்துக் கிடப்பதையும் இதை வீழ்த்திவிட்டு புதிய ஜனநாயக அரசியலமைப்பை நிறுவும் திசையில் போராட்டங்களை வளர்த்தெடுக்க அறைகூவியும் உரையாற்றினார். ஆணாதிக்கச் சிந்தனைகளை உடைத்தெறியும் வகையில் நடந்த ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும், குறிப்பாக ''ஏன்னா, நான் ஒரு ஆம்புள!'' என்ற பாடலும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

**திருச்சியில்** 21.2.2013 அன்று புரட்சிகர அமைப்புகள் இணைந்து காந்தி மார்க்கெட்டிலிருந்து சத்திரம் பேருந்து நிலையம் வரை பேரணியையும், அங்கு பொதுக்கூட்டத்தையும் நடத்தின. ஆண்-பெண் தோழர்கள் இணைந்து இசைத்த பறையோசையும், ஆண்தோழரும் பெண்தோழரும் இணைந்து நடத்திய சிலம்பாட்டமும், காட்சி விளக்கப் பதாகைகளும், உணர்வு பூர்வமான முழக்கங்களும் வழிநெடுகிலும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தன. பு.மா.இ.மு. தோழர் ஆதவன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், பெ.வி.மு. தோழர் கலா, ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத்தின் சிறப்புத் தலைவர் தோழர் தர்மராஜ் ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து, ம.க.இ.க. மாநில இணைச் செயலாளர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். இறுதியாக நடந்த ம.க.இ.க. மையக்கலைக் குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி, மறுகாலனியாதிக்கச் சீரழிவுப் பண்பாட்டின் கோரத்தை உணர்த்தி போராட்ட உணர்வூட்டியது.

**புதுச்சேரியில்** 22.2.2013 அன்று மாலை ''பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம்!'' என்ற முழக்கத்துடன் பு.ஜ.தொ.மு, பு.மா.இ.மு; ஆகிய அமைப்புகள் இணைந்து சுதேசி மில் அருகிலிருந்து பேரணியையும், அவ்வை திடலில் பொதுக்கூட்டத்தையும் நடத்தின. ஆணாதிக்கத்தையும் அதனைக் கட்டிக்காக்கும் இன்றைய அரசியலமைப்பு முறையைத் தகர்க்கவும் அறைகூவுவதாக ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

**நெல்லையில்** ம.உ.பா.மையத்தின் சார்பில் 23.2.2013 அன்று மாலை கருத்தரங்கம் நடைபெற்றது. ம.உ.பா.மையத்தின் நெல்லை மாவட்ட அமைப்பாளர் வழக்குரைஞர் தங்கபாண்டியன் தலைமையில் நடந்த இந்தக் கருத்தரங்கில் ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், புதுக்கோட்டை மாவட்ட ம.உ.பா.மையத்தின் அமைப்பாளர் வழக்குரைஞர் இராமலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இப்பகுதிகள் மட்டுமின்றி, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, **திருமங்கலம்,** விழுப்புரம் மாவட்டத்திலுள்ள **அரசூர்** ஆகிய இடங்களில் பொதுக்கூட்டங்களும், **பொன்னேரி, காஞ்சிபுரம், அம்பத்தூர்,** தருமபுரி அருகே **நல்லம்பள்ளி** ஆகிய இடங்களில் தெருமுனைக் கூட்டங்களும், **மதுரை** மற்றும் ஈரோடு - **சிவகிரியில்** அரங்கக் கூட்டங்களும் நடந்துள்ளன.



பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இப்பிரச்சார இயக்கம், உழைக்கும் மக்களின் பேராதரவுடன் தமிழகத்தின் பல பகுதிகளிலும் தொடர்ந்து முன்னேறி வருகிறது.

–பு.ஜ. செய்தியாளர்கள்.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

# விவசாயிகளை விரட்டியடிக்கும் 'வளர்ச்சி'!

கேரள மாநிலம் கொச்சியிலிருந்து தமிழகத்தின் வழியாக கர்நாடகா மாநிலம் பெங்களூருக்கு இயற்கை எரிவாயுவைத் தரைவழியாகக் கொண்டு செல்லும் திட்டமொன்றை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது, பொதுத்துறை நிறுவனமான இந்திய எரிவாயு ஆணையம் (கெய்ல்). தமிழகத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களிலுள்ள 138 கிராமங்களின் வயல்வெளிகளில் இக்குழாய்களைப் பதித்து எரிவாயுவைக் கொண்டுசெல்லும் வண்ணம் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

விளைநிலங்களில் வெறும் 20 மீட்டர் அகலத்திற்கு மட்டுமே இடத்தை எடுத்துக் கொள்ளப் போகிறோம் என கெய்ல் சாதாரணமாகக் கூறுகிறது. சிறு விவசாயிகளுக்குச் சொந்தமாயுள்ள ஒரு ஏக்கர், அரை ஏக்கர் நிலத்தின் நடுவே 20 மீட்டர் அகலத்திற்கு நிலத்தை எடுத்துக் கொண்ட பிறகு அவர்களுக்குப் பயிர் செய்வதற்கு என்ன மிஞ்சியிருக்கும்? அந்தத் துண்டு நிலம் இரண்டு துண்டாகிப் பயிர் செய்வதற்கு வாட்டமில்லாமல் போகும்.

''குழாய் பதிக்கப்பட்ட விவசாய நிலத்தின் அருகே வண்டிப் பாதை அமைக்கக் கூடாது; பாசனக் குழாய்களை அமைக்கக் கூடாது; மரம் வளர்க்கக் கூடாது'' என ஏகப்பட்ட நிபந்தனைகளையும்; ''பதிக்கப்படும் குழாய்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட நிலத்தின் விவசாயியைக் கைது செய்யவும், மூன்றாண்டுகள் வரை சிறையில் தள்ளுவதற்கும்'' வகை செய்யும் அநியாயமான சட்டங்களையும் இயற்றி வைத்திருக்கிறது, கெய்ல்.

''வெறும் 20 மீட்டர் அகலத்துக்கு மட்டுமே நிலத்தை எடுத்துப் பயன்படுத்துவதால், நிலத்தின் சந்தை மதிப்பில் 10 சதவீதம் மட்டுமே இழப்பீடாக கம்பெனி வழங்கும்'' என அறிவித்திருக்கிறது, கெய்ல். இந்த அற்பத்தனமான கணக்கின்படி, கிருஷ்ணகிரியைச் சேர்ந்த ராஜி என்ற விவசாயிக்குக் கிடைத்துள்ள இழப்பீடு 13 ரூபாய்!

அம்மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடந்த ஆண்டு தொடங்கியே நிலம் கையகப்படுத்துவதற்கு எதிராகப் போராடி வருகின்றனர். இப்போராட்டத்தையடுத்து நிலம் கையகப்படுத்துவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்த கெய்ல் நிறுவனம், ''நிலத்தைக் கையகப்படுத்த போலீசு பாதுகாப்பு அளிக்க வேண்டும்'' என்று கோரி கடந்த ஆண்டு வழக்குத் தொடுத்தது.

இவ்வழக்கில், ''விவசாய நிலங்களின் வழியாகக் குழாய் அமைப்பதற்குப் பதிலாகத் தேசிய நெடுஞ்சாலைகளின் வழியே எரிவாயுவைக் கொண்டுசெல்வது உள்ளிட்ட மாற்று வழிமுறைகள் குறித்து விவசாயிகள், கெய்ல் நிறுவனம், தமிழக அரசு ஆகிய முத்தரப்பும் கலந்து பேச வேண்டும்; கெய்ல் நிறுவனம் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு உதவியாக போலீசைப் பயன்படுத்தக் கூடாது'' என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து கெய்ல் நிறுவனம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கிலும் சென்னை உயர் நீதிமன்றம் தனது முந்தைய தீர்ப்பையே உறுதி செய்தது.





கெய்ல் நிறுவனமோ இத்தீர்ப்பை மயிரளவுக்குக்கூட மதிக்காமல் நிலப்பறிப்பு நடவடிக்கைகளை மீண்டும் எடுத்தது. தமிழகத்தின் உரிமைகளுக்காக மைய அரசோடு தினமும் மோதுவதாகக் கூறும் அம்மா அரசு, இந்த விசயத்திலோ உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மீறி, கெய்ல் நிறுவனத்தின் நிலப்பறிப்புக்கு உதவியாகத் தனது போலீசு பட்டாளத்தை அனுப்பி வைத்தது. நீதிமன்றத்தின் உத்தரவை மீறி நிலம் கையகப்படுத்தப்படுவதை எதிர்த்து விவசாயிகள் பிப்ரவரி மாத இறுதியில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததையடுத்து நிலம் கையகப்படுத்துவதற்கு 3 வாரம் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வளர்ச்சிக்காக விவசாய நிலங்களைக் கையகப்படுத்துவது தவிர்க்கமுடியாதது என ஆட்சியாளர்கள் நியாயப்படுத்துகிறார்கள். ஆனால், சொல்லிக் கொள்ளப்படும் இந்த வளர்ச்சி நிலத்தைப் பறிகொடுத்த விவசாயிகளுக்குத் திருப்பித் தருவதென்ன? வேலைக்காக நகரங்களை நோக்கி ஓடும் அகதி வாழ்க்கையைத் தவிர!